# சாண்றோர் புராணம்


Y5926 N
N14
214083



OFFICE OF THE REGISTRAR
REGISTERED
24 JAN 19
MADRAS

உ

கடவுள் துணை.

திருச்சிற்றம்பலம்.

# சான்றோர் புராணம்.

முதற் பாகம்.

இஃது

அடைசைநகர் மகா ள-ள-ஸ்ரீ சட்டைநாதக் கவிராயரவர்க
ளால் இயற்றப்பெற்றுச்
சேற்றூர் சமஸ்தான வித்துவான் மகா ள-ள-ஸ்ரீ
இராமசாமிக் கவிராயரவர்கள் மாணாக்கருள் ஒருவரும்
பிறைசை மகா ள-ள-ஸ்ரீ
நயினார் நாடாரவர்கள் குமாரருமான
வடிவேல் நாடாரவர்களால்

பிறையாறு இரத்தினவிலாசம் பிரசில் பதிப்பிக்கப்பட்டது.
1914 ௵ ஜனவரி ௴
இதன் விலை ரூ 1—0—0 (Copyright Registered.)



OFFICE OF THE REGISTRAR OF ...
REGISTERED
24 JAN 1914
MADRAS.

உ

கடவுள் துணை.

திருச்சிற்றம்பலம்.

# சான்றோர் புராணம்.

## முதற் பாகம்.

இஃது

அடைசைநகர் மகா-ள-ள-ஸ்ரீ சட்டைநாதக் கவிராயரவர்க

ளால் இயற்றப்பெற்றுச்

சேற்றூர் சமஸ்தான வித்துவான் மகா-ள-ள-ஸ்ரீ

இராமசாமிக் கவிராயரவர்கள் மாணாக்கருள் ஒருவரும்

பிறைசை மகா-ள-ள-ஸ்ரீ

நயினார் நாடாரவர்கள் குமாரருமான

வடிவேல் நாடாரவர்களால்

பிறையாறு இரத்தினவிலாசம் பிரசில் பதிப்பிக்கப்பட்டது.

1914 ஞூ ஜனவரி மீ

(Copyright Registered.)

214083
சென்னை-600 ...

OFFICE OF THE REGISTRAR OF B...
REGISTERED
24 JAN 1914
MADRAS.

## முகவுரை.

சீர்சிறந்த இச்சான்றோர் புராணம் ஆழிநனந்தலை ஆசையறியா நல மரனுற்றழியும் நாவாய்க்கோர் கரைகிடைத்தன்ன. சாதி வரம்பிகந்து மாறாக நடந்துவரு மிக்காலத்தில், சான்றோரென்ற பதம் சுயமானதன்றென்றும், (மருவிவந்ததென்றும்) சிறந்த கல்வியாளருந் தர்க்கமிட்டுழலக்கிடந்த இவ்வழக்கு நீங்கிப் புராணேதிகாசங்களிற் கூறியுள்ள இச்சான்றோரென்ற பதம் பெரும்பாலுமிக்குலத்தவரைச் சுட்டிய தென்றையந்திரிபற வுணருதற்கேற்ற ஆதாரமாக இருக்கின்றது.

குலத்தாலுங் குணத்தாலுங் கொடையாலும், பாராளுரிமையாலும் பதினெண்ணாயுத வித்தையாலும், அறிவாலுங் கல்வியாலும், நிகரற்றுவிளங்கியவாற்றால் சான்றோரென்ற கௌரவப் பட்டப்பெயரிலைற்கெய்திற்றென்றுணருமாறு போந்த நியாயாதாரங்களோடு இந்நூலிற் கூறப்பட்டிருக்கிறது.

இத்துணைப் பெருஞ் சிறப்புவாய்ந்த இச்சான்றோர் புராணம் பாடி முடித்து ஏறக்குறைய 260 வருஷங்களாகியும், இதுகாறும் அச்சுக்கு வராதிருந்த காரணம் இந்நூல் அருகிவிட்டதாகவூகிக்க வேண்டியதிருக்கிறது. இப்புராணத்திற்கு முதனூல் உண்டென்று கூறினரேயன்றி யதன்பெயருரைத்திலராயினுஞ் சுராபாண்டிய புராணத்தின் பிற்பாகத்தில் இந்நூலிற் கூறப்பட்டுள்ள சிலகதைகள் காணப்படுகிறது.

இந்நூல் அகத்தீசுரபுரத்திலிருந்து பிறையாற்றில் வந்திருந்த ஸ்ரீலஸ்ரீ குமரசாமி ஞானியாரின் சிரேஷ்ட புத்திரரும் என் தாயாரின் தந்தையருமாகிய சிவராஜ யோகியாயிருந்து வாழ்ந்த ஸ்ரீலஸ்ரீ கும்பலிங்க நாடாரவர்கள் நான் சிறு பிராயமாக யிருந்த காலத்தில், தமிழ்க் கல்லூரியிற் பயிலும்போது பாடத்திற்காக எனக்குக் கொடுக்கப்பட்டது. அந்நாளிதன் பெருமையையுணர முடியாததாயிருந்தமையால் வாளாவைத்திருக்க வேண்டியதாயிற்று.

பின்பு எழுதினவர்களின் தவறினாலும், நீண்டகாலமாக பாதுகாப்பின்றி வைக்கப்பட்டிருந்தமையாலும், சிதலாதிகளினாலும் இச்சுவடியிற் குறிக்கப்பட்டிருந்த கவிகளிலுண்டாயிருந்த அடி, சீர், அசை எழுத்துக் குறைகளையும் கற்றோரைக்கொண்டு கண்டுபிடிக்க சில ஆண்டுகளாக நான் எடுத்துக்கொண்ட முயற்சி கொஞ்சம் அல்ல, கற்றுணர்ந்தார் இதிலேதே

னும் தவறுகள் கண்டு அவற்றின் திருத்தங்களையும் தெரிவிப்பார்களில் யான் இரண்டாம் பதிப்பிற் பயன் தருமாறு பதிப்பித்து விடுகின்றேன். இந்நூல் முழுவதையும் அச்சிட்டு வெளிப்படுத்தக்கருதி ஓலையேட்டுப்பிரதியிலுள்ள கவிகளைக் காகிதத்தில் எழுதியிருந்தும் வேண்டிய பேப்பர்கள் கைவசத்திலிருந்தும் உள்ளூர் அச்சாபீசிலேயே கொடுத்து சுமார் ஐந்து ஆறு மாதங்களாயும், பல அசந்தர்ப்பங்களால் முடிவுபெறவில்லை. ஆதலின் சுமார் பாதியை முதல் பாகமாக முடித்தும் மற்றுமுள்ளவைகளை இரண்டாம் பாகமாக முடித்துவிடவுந் தீர்மானித்திருக்கிறேன். சீக்கிரம் வெளிவரும்.

இந்நூலை அச்சிட்டு வெளிப்படுத்துவதற்காகப் பொருளுதவி செய்தவர்கள் லீஸ்டை சிலநேயர்களின் வேண்டுகோளுக்காக இரண்டாம் பாகத்தில் மற்றுமுள்ள விசேஷங்களையும சாற்றுக்கவிகளோடு வெளியிடக்கருதி இப்பாகத்தில் பதிவுசெய்யாமல் நிறுத்தியிருக்கிறது.

---

## சிறப்புப் பாயிரம்.

*பிறையாறு நாடார் மகாஜனசங்க செக்ரட்டெரி ஸ்ரீமான் சி. கல்யாணசுந்தர நாடாரவர்களியற்றியது.*

மணிமன்று ணடமாடு மாகாளி வளர்த்தெடுத்த மன்னர் காதை
யணிமன்னு மடசை நகர் சட்டையப்ப னமிழ்தொழுக வரைந்த நூலை
பணிமன்னு மரற்கன்பன் பிறைசைவடிவேன் மகிபன் பலருமேத்த
எணியென்றும் புகழ்சீர்த்திபிலங்கிடவே யச்சியற்றி யெழில்பெற்றனே.

உ

# சான்றோர் புராணம்.

## கடவுள் வாழ்த்துப் படலம்.

### கணபதி காப்பு.

இரைத்துவண்டாடுங்கொன்றையிணர்பொதிவேணிவெள்ளி
வரைத்தலையமலன்செய்யமணிப்புயத்தலங்கலார்த்த
விரைக்கருங்கூந்தற்காமர்விழுப்பிடியினிதினீன்ற
கரைக்குமும்மதமால்யானைக்கழலிணை சென்னிசேர்ப்பாம். (௧)

மருமலர்வேதன்மாயன்வடிமழுக்கரத்தானென்னும்
பெருகியமூவராகிப்பெண்ணொடாணுகிப்போந்து
விரிபெரும்பூதமாகியிருசுடராகிமிக்க
வொருவருமுணர்வாய்நிற்குமொருவனைவணக்கஞ்செய்வாம் (௨)

மூதுலகுண்டுமிழ்ந்துமுழுவதுமளந்துநின்ற
பாதனையிலங்கைதன்னிற்பனிக்கடல்கடந்துசென்ற
தூதனையுடையோன்றன்னைச்சுரிகுழற்கருங்கட்சீதை
நாதனையனந்தபத்மநாபனைவணக்கஞ்செய்வாம். (௩)

கங்கைமுக்கண்ணிநீலிகவுரியாமளைகங்காளி
மங்கைசுந்தரிமாமாயிசுமங்கலிவாலைசூலி
சங்கரிதிங்கள்கங்காசடாதரிகபாலிமாயன்
றங்கைபிட்டாபுரத்திநாளிணை தலைமேற்கொள்வாம். (௪)

அருங்கலைசிறிதுமோராவளியனேன்வஞ்சநெஞ்சக்
கருங்கலைக்கரைத்துஞானங்கற்பித்தகன்னிவெள்ளைப்
பெருங்கலைசாத்தும்வாணிபின்னுபூங்குழலாள்வாய்ந்த
நெருங்கலைவென்றுள்பாதநெஞ்சகத்திருத்துவாமே. (௫)

மாறுகொள்சூரன்மார்பும்வளர்கிரவுஞ்சவெற்பும்
கூறிரண்டாகவைவேற்கூற்றினையேவிநின்ற
சீறியகருணையாளன்செந்திலம்பதியில்வாழு
மாறுமாமுகத்தோன்செம்பொனடியிணைசென்னிசேர்ப்பாம். (௬)

உரைத்தபொன் னுடனேவண்கல்லுரையிடுமொளியையாலே
யறிந்துநன்குரைப்பேனென்றோரந்தகன் றுணிவதேய்க்கு
மறைந்தவான்கடல்சூழ்வைப்பின்வலியசான்றோர்சீர்சொல்ல
நிறைந்தபேரறிவிலாதநெஞ்சினே னினைக்குஞ்செய்கை.

தென்சொலும்வடசொற்றானுஞ்சிந்தையாற்றெளிந்துதாழ்ந்த
வன்சொலைநீக்கிச்சேர்க்கும்வடிதமிழ்வாணர் தங்க
ளின்சொலினளவைக்காண்டற்கியற்றமிழ்சிறிதுமோராப்
புன்சொலும்வேணுமென்றுகொள்வராற்புவியின்மீதே.

புவிமுதனாதமீறாய்ப்புகன்றதத்துவங்கடந்த
அவிர்மதிவேணியான்முன்னானந்தநடனஞ்செய்யுங்
கவிரிதழ்க்காளியாடல்கலந்திடும்பெருமையாலே
செவியிலோர்பனுவல்கேட்டோர்திருமிகுத்தினிது வாழ்வர் (௬)

வேறு.

வரையனையபுயவீரர்சான்றோர்தம்பெரும் புகழைவடநூற்சொ
ன்ன - வுரையதனைவாணிசொலத்தமிழாகவிக் கதையையொளியா
தோங்கும் - தரைபுகழுமடசைநகரானந்தநாதனருள்சட்டைநாத-
னிரவிமதியொளிபரத்தலெனவிளங்கத்தவறிலாதியம்பினனே.(௭)

கடவுள் வாழ்த்து முற்றும்.

---

## பாயிரப் படலம்.

திருமேவும்புகழ்க்காளிமைந்தர்தங்கள்செல்வமுமற்றவர்வளர்ந்
தசெயலுமண்மேற்-பெருநீர்மைமணம்புணர்ந்தவாறுமக்கட்பேறு
மவர்போரில்வெற்றிபெற்றவாறும்—ஒருநீர்மை யுடன்றலைமை யுலக
மீதிலுற்றதுவுமரபுநிலைதவறாதென்றும்- வருநீர்மைபெறநடத்திவா
ழ்ந்தவாறுமற்றுமுள்ளசெயலனைத்தும்வகுத்துச்சொல்வாம். (௧)

சீர்மேவுகேரளத்தி னஞ்சிநாடதனினிறைசெல்வமோங்கு - மார்
மேவுதருமபுரம்வளநகரிற் சிதம்பரனன்பாகப் பெற்றோ — னோர்



மேவுமுலகுடையா னிரவிமுன்ன ரெண்ணூற் றோடிருபத்தொன்
பான் - பேர்மேவுநல்லாண்டிற்சான்றோர்கள்பிறந்தகதை பேசலுற்
றாம். ... ... ... ... (௨)

எள்ளரியகரடமடை திறக்கமதம்பாய்கரியிலிணை வெண்கோடு
முள்ளுடைய பதகமலப்புநதாதுஞ் சந்தனமுமொய்க்குந்தேனுங்
கள்ளவிழுமலரும்நாறகிலும்மயிற் பீலியும்வெண்கவரிவாலுங் - துள்
ளிசொரிவெள்ளியாறிருகரையுமலைநாட்டிற்சொரியுமாதோ. (௩)

திரண்டதெங்கின்பழம் வீழ்ந்துகமுக நெடுந்தாறிடந்துதேமாவீ
திற் - புரண்டு செழுங்கனிசிதறிப்பலாக்கனியைப்புரட்டிப்பூங்கத
லிவாங்கும் - சுருண்டகுருத்தறச்சிதறிக்கனிசிதறிசூழ் கழனிச்செந்
நெல்சிந்தி, யுருண்டு நடுகடைமகளி ரனக்குழிசியுடைத்தலை பாய்ந்
தொழுகுமாதோ. ... ... ... (௪)

ஆனமலைநாட்டகத்திற்கோதைமாநகராளுமரசர்கோமான் — தே
னவிழும்பணந்தாரான்செந்தீயின்குலத்துதித்தசேரர்தீபம் - தானெ
னவேமுடிபுனைந்துசக்கரத்தாலுலகளித்துத்தாழாமேரு -மேனிலை
யில்விறலெழுதிக்கற்கால்கொள்மிடலுடையவேந்தர்வேந்தன் (௫)

உருகாமற்கற்றோருக்குதவிசெயும்புகழாளருலகம்போற்ற- வரு
தீயின் குலமரபோர் வரிசையாய்ப் பதினெட்டாயுதமும்பெற்றோர்
பொருபடையி லெதிரேறிமதியாமல் வெற்றிகொண்ட பொய்யில்
லாதோ- ரிருவகையாய்வருசனங்களடிவணங்கக்கயிலாயத்தேகினா
னே. ... ... ... ... (௬)

தவஞ்செய்துமுத்திபெற்றறம் வழுவாதுலகளித்துத்தரைமேனி
ன்று — பவஞ்செய்யா விளங்கோவின வன்முதலாயனேகர்புவிப
ரித்தபின்னர் — நவஞ்செய்யும்புகழாளனரசர்பரவுந்தாளனதிசூழ்
வைப்பி — லவஞ்செய்யாத்திருமனத்தானிரவிகுலசேகரன்வந்தவத
ரித்தான். ... ... ... ... (௭)

வரைபுகுந்துகடுங்கானவழி புகுந்துபடகுசம்பான் வைத்துத்தா
வும் - திரைகடலின் வழியேறியானைபரிசதுரங்கசேனையேவிப்- பர
மன்னர் பறங்கிவெய்யோன் கரமடிய வடிவேலாற் படிய வீழ்த்திக்

குரைதிரையார்கலி சூழுங்கொல்ல முதன் மேருடுகொண்ட கோமான். ... ... ... ... (௮)

வளர்ந்த சடையார்விடம்பாய்திருநீலகண்டர் பொற்றாள்வணங்கிச் செம்பொன் - கிளர்ந்ததிருப்பணிமாடமாளிகை மண்டபங்கட்டிக்கேடில்லாம - லளந்தினப்பூசைக்குச் செந்நென்முதற்சம்பாவுமளந்து நாளும் - குளந்தை நகராளுமுகில்தேசமெல்லாம் புரந்தருளுங்கொற்றவேந்தன் ... ... ... (௯)

கல்விசெறிவிந்தைநகர் தானுமாலயன் பாதங்கருத்தில்வைத்துச் சொல்விரகாலறங்காத்துத் தொன்னூலின் வழிநின்று துன்பமின்பம் -பல்விதமாய்ச்சகலகலைமுறைகேட்டுவளர்ந்தபதினெட்டுநாட்டா - னல்வளமை தருநாடு மலைநாடு புகழ்நாடு நாஞ்சிநாடு (௰)

அன்றுமுழுவதும்விளைவெய்தமும்மாரியருளிச்செய்து-பன்னாளும் வளஞ்சுரந்தகுடிதழைப்பமனுநீதிபரித்துமிக்கப்- பொன்னொடுமணிவிளையவிருகரையும்பெருகிவெள்ளப்புனலதோடக்-கன்மேவுவரைதடிந்துபரளியணைகண்டபுகழ்க்காவல்வேந்தன். (௰௧)

இனைய பலபுகழ்படைத்த விரவிகுலசேகர வில்லவர்கோனென்றும்-மனமகிழவருமருகனிரவிவன்மனரசாண்டுவாழுநாளிற் - றனுவிசையானுலகுடையா னிரவிகுலத்தருமைநகர்க்காரிமைந்த-ரனைவருங்கேட்டுளமகிழப்புவிமீதிலிக்கதையையறிவிப்பேனே. (௰௨)

பாயிரம் முற்றும். ஆ திருவிருத்தம் ௨௨.

## நாட்டுப் படலம்.

கடிக்கமலத்தினிதிருந்துமறைகண்முற்றுங்கழறுசதுமுகமுனிவனுருக்கொண்டேகிப்-படித்தலஞ்சூழ்கருங்கடல்வாய்மடுத்துநீண்டபடியளந்தோன் திருவுருவிற் கறுத்துமான்கைப்- பிடித்தநெடும்பகட்டாரியென்னவோங்கிப் பெருந்திசையும் விளங்கமின்னியுல்க



மேத்த - விடத்துறை சங்கெனமுழங்கிக் கருஞ்சூன்மேகமேறிமேனெடுவரையிற்சொரிந்தமாதோ. ... ... (௧)

புகவரியசிகரமுடிவிளங்கத்திங்கட் புன்கவிகையோங்கிவரையாக்குறு - நிகரிலரசிருக்குமணி மண்டபத்து நீலமேற்கட்டியிடைத்தொடுத்துவிட்ட - பகர்வரியமந்தார மாலை தூங்கும்பத்திபொனவிடைத்தொடுத்தகவரிபோல - வகல்விசும்புநிரம்பமழைத்தாரைமாரியவ்வரையினகங்குளிரச்சொரிந்ததன்றே. ... (௨)

காலையெழுந்தகல்விசும்புவிளக்குஞ் செய்யகதிர் வெயிலானுடல்வெதுப்பும்வெப்பந்தீர-வேலைநிலமகட்குமுதுவானநாட்டுவிளங்கிவிசும்பிறங்கு ... ... ... 

வளர்ந்தகங்கைப்-பாலனையபுனல் முகந்துவிசுமையார் மனங்கனிந்தாகாசகங்கைப்-பாலனையபுனல் முகந்துவிசு

மையார் மனங்கனிந்தாகாசகங்கைப்-பாலனையபுனல் முகந்துவிசு

லம் பெருவணிகமாக்கள் போல விரிபுனலீர்கங்கையிடைச் சென்றனன்றே. ... ... ... ... (சு)

அறையுருத்தகருநாகவிடங்கள் சிந்தியானைமருப் பேரிலங்கவிரவ போலுங்- துறைகடோறும்வெண்ணுரைத்தோல்கழித்துமற்றுஞ்சொரிந்தபலபூம்போதின் புள்ளிவாய்ந்து- நிறைகதிர்ச் செம்மணிகலைகடோறுமின்ன நீணிலத்தாயிரமுகங் கொண்டிரைத்துப்பாய்ந்து - சிறைதரித்தமலையினின்றும் வேகத்தோடுசேடனுருக்கொடு கடன்மேற் சென்றனமாதோ. ... ... (எ)

வேறு.

தொண்டகப்பறைசொல்லுங்குறிஞ்சியாழ்
பண்டருமொழியன்னபைந்தேனினம்
விண்டதீங்கிழங்கோடும்விளங்கிடக்
கொண்டுபாலைநிலத்தையுங்கொண்டதே. ... (அ)

வில்லும்வாளும்விறற்கணையுங்கணை
புல்லும்வெங்கணையிற்றிபர்பூண்களும்
பல்வளங்களும்வாரிப்பரந்துபோய்
முல்லையென்னுநிலத்தினின்மூண்டதே. ... ... (கூ)

நெய்யும்பாலுநிறைதயிருஞ்செறி
துய்யவெண்ணெயும்வாரிச்சுழித்தெறிந்
தைபநுண்ணிடையாய்ச்சியர்கூறையும்
பையவாரிமருதம் பரந்ததே. ... ... (ய)

செந்நெல்வெண்ணெல்செந்தாமரைநாண்மலர்
கன்னல்கன்னிக்கமுகுகடைசியர்
வன்னவெல்வளைவாரிமலர்சொரி
புன்னையங்கரைநெய்தல்புகுந்ததே. ... ... (யக)

படகொடித்துப்பரதர்சிறுமடி
தொடவெடுத்தசுறவுபறித்தலை
நடவுதண்டுறைக்கண்டுநடுவறக்
கடலிடைச்சென்றுபாய்ந்ததுகங்கையே. ... (யஉ)



இன்னதன்மையபல்வளமெய்திட
மன்னுசீருறுசான்றவர்வாழ்வுறுங்
கன்னல்சேர்வயல்சூழ்மணிக்கங்கையாம்
நன்னலம்புனைநாட்டியல்கூறுவாம். ... ... (யங)

வரம்புமோடையும்வாவியும்வாவிசூழ்
குரம்புதாமரைக்கூட்டமுந்தட்டிய
பரம்புநெல்வயற்கால்களும்பாய்புன
னிரம்பவெள்ளம்நிலையின்றிநீண்டதால் ... (யச)

தளிகொள்மாறு தறித்துச்செறித்துநீள்
முளைநிறுத்தணைகோலிமுதுபுனல்
விளைவயற்களவாகவிடுத்துச்சே
றளையுமள்ளரிரைத்தெழுந்தாரரோ. ... ... (யரு)

உதிக்குமுன்னமெழுந்துழுநாஞ்சிலும்
விதிக்கும்வெம்பகடுங்கொடுபேர்நிலம்
துதிக்குமிந்திரனைத்தொழுதன்பொடு
மதிக்குநாட்கொண்டுழவுவகுத்தனர் ... ... (யசு)

உரத்தசெங்கட்பகடுரப் போதையாற்
பருத்தகோட்டுப்பலாக்கனிசிந்தின
குருத்ததெங்கின்குடக்கனிசிந்தின
மரத்திற்கொம்புகண்மந்தியிழுந்தவால் ... ... (யஎ)

பரம்படிக்கும்பகடயற்பண்ணையிற்
கரும்பையெட்டிக்கடிக்கச்சொரிந்தபால்
குரம்புசேர்வயற்கூட்டத்துப்பாயவே
யரும்புதாமரையன்னமருந்துமால் ... ... (யஅ)

வேறு.

உழவிடைநடக்குமேதியுயிரெனவீன்றகன்று
தொழுவிடைநினைக்கவிம்மிச்சொரிந்தபாற்பெருக்கத்தாலே
செழுமலரன்னமுண்ணச்செறுவிடையுழுதமள்ளர்
கொழுமுனைகழுவவோடிக்குரைகடற்பாயுமாதோ ... (யகூ)

சந்தனப்பொதும்பர்தோறுந்தண்முகிற்புனலைச்சிந்தி
மந்திகண்முனிவர்வேள்விவளர்த்தநீபவிப்பநோக்கி
இந்தனமடுக்கிலைவிருஞ்சிறைகோலிவீசிச்
செந்தழன்மூட்டும்பீலிச்சேவன்மாமயில்களம்மா ... (௨௰)

பண்வரிக்குயில்கள்பாடப்பச்சிளந்தோகையாடக்
கண்மலர்க்குவளைக்கன்னற்கழனியந்தலைவனோக்க
வுண்மகிழ்ந்துதவுஞ்செம்பொனுமெனவோங்குஞ்சோலைத்
தண்மலர்வண்டுகிண்டித்தாதுகளுகுக்குமன்றே. (௨௧)

கருவிருந்தலறிவெள்ளைக்கதிர்வளையுருத்தமுத்துஞ்
சொரிமலர்க்கமுகுமுத்துஞ்சுடர்விரிந்திருளையோட்ட
வுரிமையினீன்றமுட்டைக்கூடுவிட்டுதிர்ந்ததென்னக்
குருவிகளலகிற்கவ்விக்கூட்டினுளுய்க்குமன்றே ... (௨௨)

விளைவிக்குங்கழனிமள்ளர்வித்துறுவட்டில்தாங்கி
முளைவிதைத்தெறிபவஞ்சிமுண்டகப்பொருட்டினின்று
கிளையுடையன்னந்தாவக்கிழிந்தரும்பிழிந்ததீந்தே
னிளவரிக்கயல்கள்மாந்தியிளமரக்காவிற்றாவும் ... (௨௩)

வான்முளைதெளித்துத்தேன்பாய்வாய்மடைமாற்றிநீண்ட
கானிமிர்புனல்கள்பாயக்கவின்பெறத்தலைகவிழ்த்து
தூனிறச்சுடர்விரிந்தமரகதக்கொழுந்துதோன்ற
காவிலத்தெழுந்துசெந்நெனாறுகள்வளர்ந்ததன்றே ... (௨௪)

நடுதொளிகலக்கிச்செந்நெல்நாறுகள்பிடுங்கிச்சேர்த்த
முடிகடைசியர்கள்வாங்கிமுடியவிழ்த்தகல்வானெங்கும்
மடிவிலிந்திரனைவாழ்த்திவணங்கியேநிரையாய்நின்று
அடியிடைத்துவளச்செங்கைச்சுடர்வளையொலிப்பநட்டார் (௨௫)

நட்டகூனிமிர்ந்துவாய்ந்துநானிலத்தெழுந்துசூலாய்
மட்டறக்கதிர்களீன்றுமறைமொழியறியாதானஞ்
சிட்டியசெல்வர்போன்றுகிளர்நதிருமாந்துநல்லோர்
முட்டிலாவறிவுபோன்றுமுதிர்ந்துகாய்பழுத்துச்சாய்ந்த (௨௬)



சாய்ந்தநெற்பருவம்பார்த்துத்தண்புனலகற்றிமள்ளர்
வாய்ந்தநற்கொடுவாள்பூட்டிவரிக்கதிரரிந்துவைத்துக்
காய்ந்தபின்னிலங்கப்பெய்துகட்டுவைத்திறுகப்பூட்டி
யேந்துபொற்சகடத்தேற்றியெங்கணுங்களத்தினுய்ப்பார். (௨௭)

பிறைபுரைக்கொடுவாள்சாய்த்தபிணிபடுகதிர்கண்மள்ளர்
குறைவறவாரும்போதுகுடவளையோடும்வாரி
முறைமுறைசுமப்பச்சங்கமுதிர்ந்துசூலுளைந்தமுத்தம்
நிறைகதிர்க்கட்டிற்சிந்துநெல்லுடனுதிருமாதோ. ... (௨௮)

வையகத்தேற்றுஞ்சூட்டுவைவிரித்துதரிநீல
வெய்யகட்பகடுபூட்டிமிதித்தவையகற்றித்தூற்றிப்
பையவேமுறத்தால்வீசிப்பயன்படாப்பதடிநீக்கி
மொய்கதிர்ச்செந்நெல்வேறுமுத்துவேறுக்குவிப்பார். (௨௯)

தானவேதியர்க்கும்யோகஞ்சார்ந்தமாமுனிவருக்கும்
ஆனதேவருக்குமுந்நூலாய்ந்தசெந்தமிழ்வாணர்க்கு
மீனமில்தமதுசுற்றத்தவர்க்குமேலெவர்க்குநல்கிப்
போனபின்விருந்தோடுண்ணப்புரையறுமனையினுய்ப்பார். (௩௰)

கரும்புடனெரிந்தபாகுங்கட்டியுந்தேறல்பாயும்
பெரும்பலாக்கனியும்வாழைக்கனிகளும்பிரசம்பாயு
மரும்பவிழ்மாவின்செய்யகனிகளுமடையவாரித்
தருஞ்சகடளப்பிலாததடந்தொறுநடப்பமாதோ. ... (௩௧)

சாரலிற்கிழங்குந்தேனுஞ்சந்தனக்குறடும்வாய்ந்த
காரகிற்றுணியுமேலக்காய்களுமானைக்கொம்பு
நீர்விரிகடலினுள்ளநிறைந்தசெந்துகிர்மீனம்ப
ராரமும்பொன்னுஞ்செம்பொனுடையுமிறங்குமாதோ (௩௨)

உறியிடைத்தூங்குநெய்யுமுறையும்வெண்டயிருங்காய்ந்த
செறிநறும்பாலும்வெண்ணெய்த்திரள்களும்விளைந்துசாய்ந்த
முறிகதிர்வரகினோடுமுதிரையுமாயர்மேய்க்கும்
மறிகளுங்கன்றுமாவும்வயின்வயின்வயங்குமாதோ. ... (௩௩)

நாட்டுப்படலம் முற்றும். ஆக திருவிருத்தம் ௫௫.

# நகரப்படலம்.

நலங்கொணாட்டணியுரைத்தனநாமநீர்வேலை
இலங்கைகாவலராகிமுன்னீழமுந்திரைகொண்
டலங்கல்வேலினலமந்திகன்றனைவெலுங்கழற்கால்
வலங்கொள்சான்றவர்நன்னகரணியினைவருப்பாம். ... (க)

வலங்கொள்பூமகள்மேகலாபரணமாய்வயங்கும்
பொலங்கொணேமிவான்கிரியெனவுரைக்கலாம்புரிசை
யலங்குநேமிசூழ்புறக்கடலாகுமவ்வகழி
தலங்கொள்சோலையேயுததிசூழிருளெனத்தயங்கும். ... (உ)

வீசுகால்களும்பகையெனவரில்வெட்டும்பொறியு
மீசனார்விதியளவன்றியமனும்வந்துற்றாற்
பேசுமுன்னவன்புயங்களைப்பிணிக்கும்வெம்பொறியும்
வாசறோறுநீள்கொம்மைகளிடந்தொறும்வயங்கும். ... (௩)

அலகில்வானவர்கங்கைநீராடுவான்வேண்டி
யுலகமீதுறவமைத்தகண்ணேணியையொப்ப
விலகுசெம்மணிப்பத்தியாலெழுநிலம்வகுத்து
நலமிகுந்தபொற்கோபுரநான்கும்வானோங்கும். ... (௪)

புனைபசுங்கொடிப் பூவையர் கணவரோடுடி
வினையமாமணிமுத்தமோடல்லரையும்வீசச்
சினவும்யானையின்மும்மதச்செழும்புனற்பெருக்காற்
கனகவீதிகள்கங்கைமாநதியினைக்கடுக்கும். ... (௫)

பம்புநீர்க்கடல்பழித்திடுங்கொடியிரண்டருகு
மம்பொனாற்செய்தகொடிகளுக்கிடையிடையாடத்
தும்புதெண்ணிலாச்சொரிமுத்தமகரதோரணங்க
ளும்பர்வானகத்தொழுங்குறப்பரந்துநின்றாடும். ... (௬)

ஆறுபாய்விடவாசுகியோடுவாதாடிச்
சீறுகால்பொரவஞ்சியமேருவின்சிகர



THE REGISTRAR OF BOOKS
REGISTERED
24 JAN 1914
MADRAS.

மீறிலாநகரிதுவெனவோங்கியேவந்து
மாறிலாதபொன்மாளிகையளப்பிலவயங்கும். ... (௭)

தொக்கவேதிகைநிலாமணிதொகைகொடுதொகுத்து
நக்கவச்சிரத்தூண்களாலாயிரநாட்டி
மிக்கசெம்மணிமேனிலமுழுவதும்விரித்துச்
செக்கர்மாளிகையாயிரமாயிரஞ்சிறக்கும்... ... (௮)

தயங்குமார்பினிலுத்தரீயத்திரட்சாத்தி
மியலகுபார்முழுதளந்தமால்நிற்பதாமென்ன
முயங்குவெண்டுகினெடுங்கொடிப்பத்தியாய்மொய்ப்ப
வயங்குநீலமாளிகைநிரையளப்பிலமல்கும் ... (௯)

பசும்புனற்செழும்பான்மதியணிசடைப்பரம
னசும்புவெள்ளியங்கிரிநடுவரசிருந்தென்ன
விசும்பில்வானதிவெண்ணிலாத்தவழமாணிக்கத்
தசும்புவேய்முத்தமாளிகையெண்ணிலதயங்கும். ... (௰)

சித்திரச்சுதைமாளிகைநிரைபலதிகழும்
வைத்தசந்திரகாந்தமாளிகைபலவயங்கும்
பத்திவச்சிரமேனிலைகோடிமேற்பம்பு
மொத்தசெக்கர்வான்பவளமாளிகைபலவொளிரும். ... (௰க)

வயிரமாளிகைச்சாளரவாயில்கடோறுஞ்
செயிரறச்சென்றுநுழைதலின்மதிக்குடறேயு
முயருமாளிகைமரகதத்தலத்துடலுரிஞ்சப்
பயில்களங்கமன்றேமறுவெனச்சிலர்பகர்வார். ... (௰உ)

இருக்குந்தாருகன்றனைக்கொலமுன்னிமைந்தரெழுவர்
பிறப்பராமெனவானவர்பெருநகர்நோக்கிச்
சிறக்குமின்னகர்கைமறிப்பதுவெனச்சேணிற்
பறக்கும்வெண்ணிறப்பட்டினாலமைத்தபொற்பதாகை. ... (௰௩)

மாடத்தும்பரிற்பேதைமங்கையர்மலர்மாலை
சூடக்கூர்தவீண்டிலாதவர்[illegible]பிடித்துக்

24083

கூடச்சேர்ந்தலர்கொண்டையாய்ச்சொருகியகோல
மாடித்தட்டிடைநோக்கிநல்லழகமைந்திருப்பார். ... (௰௪)

உறங்குமங்கையர்முகமதிகண்டலுமுருகி
இறங்குகாந்தநீர்சேடியர்வள்ளத்தினேற்று
பிறங்குதண்புனலருவிதாழ்தென்வரைப்பிறந்த
கிறங்கொள்சந்தனமரைத்ததினிறைமணம்சேர்ப்பார். ... (௰௫)

சிகரமாடத்தின்மங்கையர்சிறுவிரலளந்த
மகரயாழெழுமோசையுமணிமுழவொலியும்
பகரும்பூவையுங்கிளிகளும்படித்தபாடைகளு
முகமெழுங்கடலாமெனவிடையறுதொலிக்கும். ... (௰௬)

சிறந்தமங்கையருடலிற்சிதறுமுத்தார
மெறிந்துவீதியிற்கிடந்ததுயானைக்கால்பிணிப்ப
வறிந்தயானையுமப்புறமிப்புறமசையா
நிறைந்தவல்லிகால்பிணித்துளதாமெனநிற்கும். ... (௰௭)

வேதவேதியர்மடந்தொறுமனைதொறுமோதுங்
கீதவாய்மொழிச்சாமவேதத்தினைக்கேட்டுப்
போதுசேர்குழல்மங்கையர்வளர்த்தபூவைகளுக்
கேதில்பச்சிளங்கிள்ளைகள்கற்றிருந்தியம்பும். ... (௰௮)

வரித்தகொங்கையிற்கச்சொடுமணிமுத்தவடமும்
விரித்தமேகலாபரணமும்விரைவுடனடுவிற்
சொரிந்துவைத்தொருகரியுரைமடமினார்சோபைப்
பொருந்துபன்னிறப்பலகையிற்[illegible]பொருவார். ... (௰௯)

விலையின்முத்தமும்பவளமும்விளங்குபொற்பட்டுந்
தொலைவில்செம்பொனுந்தமாலமுமேலமுந்தோன்றி
நிலையிலாதபல்வளங்களுநிரம்பலானீண்ட
வலைபெருங்கடலொத்தனவாவணவீதி. ... (௨௰)

கடித்தபூண்முலைத்தையல்லார்குடங்கவின்முகந்த
குடத்துநீருடனேறிபவாள்வளைகொழிக்க



சுடர்ச்செழுந்தரளத்தொடுமுன்றில்கடோறுங்
கிடப்பதாரகைசூழ்பலமதியெனக்கிளரும். ... (௨௧)

வாவும்வாசியுமும்மதம்பொழியுமாமலையுந்
தாவுஞ்சில்லியந்தேர்களுமமரிடைச்சார்ந்து
தூவும்பல்படைவயவருமளப்பிலத்துன்ன
மேவுநாற்பெருங்கடலெனவெங்கணும்விரியும் ... (௨௨)

எஞ்சிலாப்புகழுலகுடைப்பானிறவிமானத்
தஞ்சமாமெனவருங்கவிஞோர்தமிழிசைபோல்
விஞ்சுதண்டைகள்காருடனொலிப்பவிண்டாவு
பஞ்சவேகத்தவயப்பரிநடத்துவார்பலரும். ... (௨௩)

வாய்ந்தபூண்முலைமடந்தையர்முலைகளின்வழிந்த
சாந்துகால்களின்வழுக்குறமும்மதந்தாழத்
தோய்ந்தவீதியிலிருணிரைத்தொகுதிகள்போல
வேந்துவெண்மருப்பியானைகணடத்துவாரெங்கும். ... (௨௪)

காயும்வெங்கனைசொரியும்விற்கப்பணங்கறைவாள்
தீயவெங்கதைமற்றெழில்சிறுமுனைநெடுவே
லாயுதம்பொருதொழிலெலாமுறைமுறையாகப்
பாயும்வெம்புலியினமெனவயவர்கள்பயில்வார். ... (௨௫)

மாடகத்தயாழ்கின்னரியிசைமுறைவழாமற்
பாடமத்தளமிடக்கைதுந்துபிபலமுழங்கப்
பீடுபெற்றதாள்சதிமுறைபெயரநாடகியர்
நாடகத்தொழில்பயிற்றுவரெண்ணிலர்நாளும். ... (௨௬)

சேமநீணிதிப்பெறுமையாற்செல்வத்தாற்செறிந்த
தாமவார்குழன்மங்கையர்சிறப்பினாற்றணவா
வாமவானவர்நகரெனப்பொலிந்ததுமதிற்சூழ்
நாமநீருலகேத்துபிட்டாபுரநகரம். ... (௨௭)

அன்னபொன்னகர்க்குயிரெனவரசுவீற்றிருக்குங்
கன்னிநாககங்கணிதிறற்சங்கணிகரத்தாள்

சென்னிதாழ்வுறுசேவடிக்காளிகங்காளி
பொன்னிறும்புகழ்கோயிலின்வளமெலாம்புகல்வாம். (௨௮)

வேறு.

அப்பொன்னகருக்கொருபாரிசமாகமாயோ
னைப்பிற்றுயில்கொண்டருடண்டமிரோங்குமாலுக்
கொப்பொன்றெனலாய்ப்பொலிவாயண்டகூடமென்னும்
வைப்பினளவாய்க்கொழுந்தோடிவளர்ந்ததன்றே. (௨௯)

உருகொம்புசரிந்தநிழற்குளுயர்ந்ததேவர்
பெருகுந்திறலார்கண்முப்பத்துமுக்கோடிபேரு
மருகொன்றியிருப்பதன்றியசைந்துதிர்ந்த
சருகொன்றிலடங்குநிலந்தலைதாங்குநாகம். ... (௩௰)

மாகம்பொலியோரிலைமீதினின்மந்தனேறுங்
காகந்தனிவாழுமலர்க்கருங்கண்ணனேறும்
வேகந்தருபுள்ளரசோரிலைமீதுவாழும்
மேகம்முதனான்முகனன்னமேல்நாளும்வாழும். ... (௩௧)

சுடர்வெண்மதிசூரியன்தாரகைசூழும்வானி
னுடறேயநெருக்கிடந்ததினூடுபோவ
அடல்வெங்கலுழன்றனையஞ்சியநாகமெட்டு
மிடமொன்றியேவேர்முளையொன்றிலிருக்கலாகும். (௩௨)

அவ்வாவிடத்தோங்கியகோபுரமண்டமேழுஞ்
செவ்வேசெலநீண்டதுசெம்பொனின்மேருவென்ன
வெவ்வானவருமயிர்க்கின்றதிருண்டமேகம்
தவ்வாநெடுமால்வரையாமெனத்தங்குமாதோ. ... (௩௩)

படிகத்தையறுத்தடுக்கிப்பசும்பொன்குழைத்து
வடியிட்டவெண்சாந்தெனவேவரைதோறுமூட்டிக்
கொடிநட்டுயர்வானகமெங்குங்குழீக்கொண்டாடச்
சுடர்பொத்திடுமாமதில்மூன்றுளசூழ்ந்துநிற்கும். ... (௩௪)



பேனத்திரையிற்பவளப்பெருந்தூணிரைத்து
மேனித்திலவுத்திரம்வைத்துவிரித்தசெம்பொ
னானத்திரள்தாலிந்திரநீலமடுக்கிநீண்ட
வானத்தளவாய்வளர்ந்தோங்கினமண்டபங்கள். ... (௩௫)

அக்கோயிலினன்னகருக்கரசாகிவிண்ணோர்
முக்காலமும்வந்துவணங்கமுனிக்கணங்கள்
தக்கோர்சதுமாமுகனிந்திரன்தாழ்வில்லாத
மிக்கோர்தொழுங்காளியுமன்பொடுவீற்றிருந்தாள். (௩௬)

ஆகத் திருவிருத்தம் ௩௬. நகரப்படலம் முற்றிற்று.

# உற்பத்திப் படலம்.

அழியாவலியான்றுருகனையறுத்துவிகடன்றலைபரித்து - பொழியா
முகிலைப்பொழிவித்துப்பூரிசனைக்கொன்றலைகடலின் — வழியாயி
றங்கியிலங்கைநகராண்டவணிகர்மானங்காத் — தொழியாவுலகில்
வலங்கொண்டசான்றோர்பிறவியுரைசெய்வாம். ... (௧)

தெள்ளித்தராளங்கொழித்தெறியுந்திரைசூழுலகம்பசித்தான்போ —
லள்ளிப்பொசிக்குந்திருநெடுமாலன்றோர்கற்பகாலத்தில் - வெள்ளி
க்குருத்துவிரித்தன்னவிளங்குஞ்சோதிப்பாற்கடலிற் - புள்ளிப்பொ
றிவாளரவணைமேற்பூம்போதனையவிழிதுயின்றான். ... (௨)

அன்னாளுலகப்பேராழியழிக்கவழிந்துகிடந்ததற்பின் - முன்னாழி
யினிற்றுயில்கூருமுதல்வனுணர்ந்துமனமிரங்கி — யென்னாலழிந்த
பேருலகம்யானேபடைப்பேனெனவுந்திப் — பொன்னார்பொகுட்
டுச்செழுங்கமலப்போதிலயனைப்பிறப்பித்தான். ... (௩)

முதுபாரகத்திலுயிர்க்குடலமுழுதும்படைக்குந்தொழிலெம்மா
- லிதுபோதாகாதென்னநினைந்தெமக்கும்புதல்வர்வேண்டுமென -
மதுவார்கூந்தற்கலைவாணிவாழுந்திருநாவுடையமலர்ச் - சதுமாமு
கனுங்காசிபனேமுதலாம்பதின்மர்தமைப்பயந்தான். ... (௪)

பயந்தபொழுதிற்காசிபனும்பழமாமறையோன்செழும்பாலைக் -
கயந்தமொழியாளொருபாகங் கலந்தோன்றிருத்தாள் சேவிப்ப —
உயர்ந்தகயிலைபுகுந்தானைவணங்கியுடனேவரவிடைகொண் - டியந்
தவரையின்வடவரைப்பாலிறங்கிவிரையவரும்பொழுதில். (௫)

மன்னும்வெள்ளிவேதண்டவரையின்சாரல்மதியரவஞ்-சென்னி
முடிக்கும்பரமனிருசெவியிற்றமிழினிசைவடிக்குங் - கின்னரேசன்
குலமரபிற்கேகையன்பெற்றெடுத்தசிறு — கன்னியழகார்காந்தரு
வைதன்னைக்கடுகமணம்புணர்ந்தான். ... ... (௬)

காமக்கனியுங்காசிபனுங்கலந்துசிலநாளினிதிருப்ப — வாமச்சது
மாமறைவிளங்கவானோருலகுதலையெடுப்ப — நாமச்சுடர்வேலரக்
கர்குலநடுங்கமனுவின்முறைநடப்பத் -- தாமக்கூந்தற்காந்தருவை
வித்யாதரனைத்தனிப்பயந்தாள். ... ... (௭)

கரவொன்றறியாத்தாதைபுனற்கங்கைக்கரையிற்போயிருந்து -
பரவுந்தவஞ்செய்கெனக்கங்கைபகிர்ந்துபாயும்போக்கிலொரு - வ
ருமான்மரத்திற்சருகருந் திவருடம் பதினாயிரம்பகரு — மிரவுபக
லொன்றறியாமலேலாசினியிற்றவம்புரிந்தான். ... (௮)

இடைபிங்கலையின்வழிவாயுவியங்கரவண்ணமடக்கிநடுப்
படருஞ்சுழினைதிறந்தாறுதாரத்தேற்றிப்பகரரிய
நடனந்தனைக்கண்டழிவில்லாநாதந்தன்னிற்கருத்தூன்றித்
தடமொன்றியவைந்தீநடுவணிருந்துதவஞ்செய்திடுநாளில் (௯)

மின்னார்மருங்குன்மடவார்கண்மேனியொளியாலவர்பூண்ட
பொன்னாபரணத்திளவெயிலாற்பூமிமுழுதுந்தனிச்சுமக்கும்
பன்னாகத்தினெடுஞ்சுடிகைப்பத்திமணியின்சுடரதனா
லென்னாளுஞ்செங்கதிரின்றியிருள்போயகலமிகவிளங்கும். (௰)

பாயுங்கிரணமரகதத்தாற்பசும்பாசடைகடழைத்தோங்கச்
சேயகனிகள்செம்மணியிற்றிகழமுத்தான்மலர்விளங்கத்
தூயதளிர்கள்பவளத்தாற்றோன்றச்செம்பொற்றருவளர்ந்த
மேயபொதும்பர்புடைசூழவிளங்குநாகலோகமதில் ... (௰௧)



பொற்பார்கனகமணிமாடப் புரிசைசூழும் விமலையெனு — மெற்
பாய்நகரத்திருந்துலகமெங்குந்திகிரிபுகவுருட்டி - விற்போனுதலார்
பலகோடிவிளக்கந்தாங்கவிரைகமழுங் - கற்பூரச்சாந்தணிமார்பிற்
காதமளவும்விரைகமழ. ... ... ... (௰௨)

மல்லார்புயத்துப்பசுங் கனகவலயமிலங்கமணிநீலக் — கல்லார்
மார்பின்முத்தாரங்கவினவுதயவரைமுடியில் - எல்லார்கதிரோனு
திப்பதுபோலிரத்னமகுடமிலங்கவரு -- மல்லார்மதிவானுதிப்பது
போலணியர்கொற்றக்குடைநிழற்ற. ... ... (௰௩)

கருங்காற்கழற்சங்கருடனென்பான்கனகவரியாசனமீது - நெரு
ங்குமரசர்வணங்கவரசிருக்குநாளினிறைகுணத்துச் - சுருங்குமருங்
குற்கருங்கண்முலைத்தோகைச்சாயற்றூயமுல்லை - யரும்புநகைமஞ்
சனிவயிற்றிலெழுவர்மடவாரவதரித்தார். ... (௰௪)

நீலக்கொண்டலிளமின்போனிறையும்பசும்பொற்கொடிபோலக்
- கோலக்கனிவாய்ச்சிறுகிள்ளைக்குலம்போற்கூவாச்சிறுகுயில்போ
ல்-வாலப்பருவத்தீராறுவயதுமுதிரவளர்நாளில்-ஏலக்குழலார்தா
தைபொற்றாளிறைஞ்சியொருவாய்மொழிசொல்வார். (௰௫)

வங்கந்தவழுந்திரைசூழ்ந்ததரைமேலிமையவரைத்தென்பா-லங்
கொன்பதினாயிரமானவளவையுடையோசனைகடந்தாற் — கங்கை
யென்னும்புனிதநதிக்கரையில்வடபாலுளதுலக - மெங்கும்புரிந்த
பவந்தீர்க்குமேலாசினியென்றொருதீர்த்தம். ... (௰௬)

ஏலத்தருக்களிடைகலந்தவேழுபலவுண்டதன்கனிகள் - காலத்
தளவையறிமுனிவரருந்தவளர்ந்தகாட்சித்தாஞ் -- சூலப்படையா
னுருவிரும்பிச்சொன்மாமுனிவர்பலவேள்வி -- மூலப்பொதும்பர்
தொறும்வளர்த்துமுத்தராகிச்செல்குவரால். ... (௰௭)

என்றுநதியின்புனிதமுமங்கிருப்போர்செயலுமெண்ணிறந்தேர்ச்
சென்றுதோய்ந்துபெறும்பேறுந்திருநாரதனாரெமக்குரைத்தார் -
பொன்றுமுடலநீர்க்குமிழிபோலுமென்பதுலகியல்பால் - துன்றுபு
யத்தோயொருமுறைபோய்த்தோய்ந்துவருதுமெனவுரைத்தார். -



24083

என்னுமளவில்வல்விடமுமருந்துமருந்தியிருந்தான்போன் -மன்
னன்மிகவும்மனம்வருந்திமடவார்தங்கண்முகநோக்கி - கன்னன்
மொழியீரொருதிங்கட்காறுதிருக்கிலுயிர்வாழேன்-மின்னும்புனி
தப்புனலாடிவிரையவருகவெனவிடுத்தான். ... (௰௯)

ஆனிச்சமலர்மெல்லடித்துவர்வாயனையுமிரங்கிளிடைகொடுப்பத்
தனித்தங்கெழுவராதுவழியாய்ச்சார்ந்துதடங்கடொறுமிருந்து - ப
னிக்கண்ணுயின்றேவருந்திநெடும்பாரிற்றூரநெறிகடந்து — கனித்
தண்டலைகள்பலசூழ்ந்தகங்காநதியின்கரையடைந்தார். (௨௰)

அடைந்துபுனிதநதியாடியடுக்குந்தூய்நீர்த்துறையணைந்துங் - கு
டைந்துபுலர்ந்தகுழல்முடித்துக் கொழும்பொற்பணிகள்புனைந்தும
லர்மடந்தையனையார்பூக்கொய்துவண்டலிழைக்குமிடந்தேடி -யிட
ங்கொள்வித்யாதரமுனிவனிருக்குஞ்சோலையருகணைந்தார். (௨௧)

பாகுநிகர்க்குஞ்செழுங்கனிவாய்ப்பகருமழலைமொழியும்விடநாக
வரிப்பொற்சிலம்பலம்படக்குந்தொனியுஞ்செவிப்புகலா -- லாகம
ணியுஞ்சாந்தவிரைநாசியிடைச்சென்றடைந்தலான்-மோகமடவார்
வரவென்னமுனியும்விழித்துநோக்கினான். ... (௨௨)

கந்தமலராசனத்திருக்குங்கன்னியவளுமொருத்திமணிச்- சந்தப்
புயத்திந்திரன்மார்பந்தழுவுமயிராணியுமொருத்தி --- சிந்தையிடத்
திற்பிறந்தமதன்றேவியவளுமொருத்தியிப்போ - திந்தவனத்திற்றனி
வருவாரெழுவரிவராரெனவயிர்த்தான். ... (௨௩)

சிற்றுமதிபோற்சிறுநுதலிற்றிரண மணியொன் றிலங்குதலாற் —
றேற்றுங்கமுகமணிக்கழுத்திற்சுடர்ச்செம்மணியுள்ளடங்குதலா --
லேற்றவிளமையாற் கழியாரெழின்மாநிலத்தாரன்றுருவிற் --- சாற்
றுமிவர்பன்னகாட்டுத்தையலாரென் றினிதுணர்ந்தான். (௨௪)

வேறு.

எரிகதிர்மணியாற்செம்பொனன் முத்தாலிணங்குறமயன்வகுத்த
மைத்த-விரியுமேகலையினுடையுடையாரைவிரைச்செழுங்கமலமெ



ன்மலரில் - அரிபுனைசிலம்புபூண்டொலிப்பதுபோலழகமர்சீரடியா
ரை - வரைவருபிடிபோலன்னம்போன்மெல்லவழிவருநடையுடை
யாரை. ... ... ... (௨௫)

கற்பகக்காவிற்கங்கைநீர்வார்த்தகதலியந்தண்டெனவுயர்ந்த --
வற்புனைசிறந்த யானையின்கரமென் றயிர்த்த செம்பொற் குறங்கினா
ரைப்-- பொற்பமைதேரோபாம்பின்றெண்படமோபொன்னகலோ
வெனநாளுஞ் -சொற்பொருளுணர்ந்தமுனிவருந்திகைப்பச்சுடர்வி
ரிகடிதடத்தினரை. ... ... ... (௨௬)

அறங்கோலைபயிலுமல்குல்வாளரவமகன்றவாய்கொடுத்தினமருந்
துந் - திறத்திலுலவழிந்ததெனச்சிலரயிர்க்கத்தேய்ந்தநூலெனுமருங்
கினரைப் -பொறுத்தபூண்முலையின்வரையினின்றுந்திப்பொற்சுழி
ப்பொய்கையினிறங்கும்-கறுத்தவாளரவக்குருளைபோல்வயிற்றின்
கரியரோமத்தழகினரை. ... ... ... (௨௭)

வரையெடுத்தமரர்கடைந்தநாட்பிறந்தவடிபடுதெள்ளமுதடை
க்கும்-புரையறுகுடம்போற்றனத்தடிகொண்டுபுளகித்தபூண்முலை
யாரை -- திரைவளையொலிப்பத்துகிர்விடுகொடிபோனிறைவிரலா
ழிகளிலங்கும் --- கரைதவழ்புனல்சேர்தடத்திடைமலர்ந்தகமலம்
போற்கரதலத்தினரை ... ... ... (௨௮)

தேமருகரும்புக்கற்பகக்கொடியுந்தீட்டிநல்லழகுவாய்த்திலங்கு-
மேமமால்வரையிற் பச்சிளங்கமுகுபோ லிணங்குபொற் றோளுடை-
யாரை -வாமவார்கூந்தலிரதிகைப்பிடித்துமணம்புணர்ந்துலகெலா
ந்துதிப்பக் -- காமனாரம்பாம்விழிமுகநகைகொள்கமுகெனுங்கந்த
ரத்தினரை. ... ... ... (௨௯)

பானிலாக்குருக்கைவில்லென விளங்கிப்பதித்தமுத்தெனநிரை
வாய்ந்து -- காணவில்முல்லையரும்பெனக்கூர்த்துக்கண்கவர்வெண்
ணகையாரைத் - தேமொனச்செழும்பாகெனக்கினைவார்தஞ்சிந்தையி
னளவையிற்பரந்து-கூனல்வாய்க்கிளிக்கும்பூவைக்குமன்னிக்கொடுத்
தபுன்மழலைவாக்கினரை ... ... ... (௩௰)

ஈட்டுபொற்குழையிற்றுவிமீண்டாலமெனக்கறுத்தமுதெனவெ
ளுத்துக் -- கூட்டுமையெழுதியையரிசிதறிக்குடங்கையினடங்குறுத
கன்று - சேட்டகன்புயத்தார்மேற்பொரப்புரூரச்சிலையிடைகோக்
குஞ்சுங்கணைபோல் -- வேட்டுயிர்கவரும்மறனிகைவேல்போல்வெங்
கொலைபயில்விழியாரை. ... ... ... (௫௧)

கனிந்துதேன் பாயுங்கொவ்வையும் பவழக்கடிகையுமெனவொளி
வளர்ந்து -வணைந்தபூணிளைஞரருந்தநல்லமிர்தின்மதுரித்தமணியித
ழாரைச் -- சினங்கொளும்போரிற்பூங்கணை மதனன் நீட்டியசாணை
போலிரதி-யனங்கனுருவந்தீட்டியபடிகமன்னபொற்கபோலத்தி
னாரை. ... ... ... ... (௫௨)

வாங்குருமுயிருமனங்களுந்தொடரவணைந்த பொன்னூசலினைசந்
து - பூங்கொடிவள்ளையெனப்புடைதாழ்ந்துபொற்பணியணிகுழை
யினாரை - யோங்குகானகத்திலெள்ளிளம்பூவுமுயர்ந்தசெண்பகமெ
னவமைந்து - கோங்குநாண்மலர்க்குமொருமுறைமணக்கிற்குளிர்
மணங்கொடுக்குமூக்கினாரை. ... ... (௫௩)

வீரவேற்கரத்தார்கிறங்களிற்பொருதுவெல்வதற்கிணையறக்கற்ற
--மாரவேள்கையிற்சிறுகழைவிற்போல்வளைபுருவத்தழகினாரைக்--
காருடனுகங்கவ்வுறத்தெறித்தகாளகூடக்கருந்துளிபா-யேரிளமதி
யின்மறுவென்த்திலதமெழுதியசிறுநுதலாரை ... (௫௪)

அறைபுனல்பெருகிக்கரையெறிந்தோடவலைகொழித்தெறியவா
ன்கங்கைத்-துறைதொறும்பறந்தகருமணல்போலத்தொகைபடுஞ்
சைவலம்போலக்-குறைவரவளர்ந்துபூந்தொடைசொருகிக்குழைந்
துநெய்த்திருண்டிடைசுருண்டு -- நறையிரியகிலின்கொழும்புகைய
ளாவுநள்ளிருட்கருங்குழலாரை. ... ... (௫௫)

வேறு.

கண்களிப்புறக்கண்டனன்காமனேபாயப் - பெண்கடங்களின்
வளப்பெனும்பேரழல்கொளுத்த -- வெண்கொள்சிந்தையுமரக்கெ
னவுருகிடவிளைந்தான் -- விண்கொளாதிபரென்னினும்விடுவனோ
காமன். ... ... ... ... (௫௬)



கணையினாலெனைவென்றவக்காமனையானு --- மிணையில்பொற்பி
னால்வெல்வலென்றெடுத்ததுபுரைய -- வணையுஞ்செவ்விபோட்டரசி
ளங்குமரனுருக்கொண் -- டிணையுமாசைநோய்கொளவவர்விழிக்
கெதிருற்றான். ... ... ... (௫௭)

உற்றமங்கையிருந்தவத்துமைப்பயந்தவர்யார் -- முற்றுமுயிர்
வாழ்வுறுதலான்முழுமணிபதிக்கப் -- பெற்றநல்லணியெனத்திகழ்
பெருந்தலநாமம் - நற்றிறத்தினிங்கெய்துமாறென்னெனநவில்வார்.

சொற்றவெம்பெயர்குஞ்சரிவிந்தைசொற்கமலை -- யுற்றசுந்தரிகன
கைநல்லொண்மைகைத்திலகை -- கற்றதாதகையெமைப்பெற்றதா
தைசங்கருடன் - நற்றவர்மிகும்பொற்பதிநாகலோகத்துறும்விமலை.

விமலைமாநகரிருந்துவான்கங்கையைவிரும்பி - யமலமாயுறைபழ
ம்புனலாடவந்தணைந்தோம் - கமலைவாழ்திருமாநகராயெனக்கழற
மலன்னவர்க்கிம்மொழிபகர்ந்தனனியவால். ... (௬௰)

உன்னிபின்னரேத்தினிதுதித்தவான்சிறுவர்-மன்னுதம்மனமதி
த்ததெல்லாமவர்முடிப்பர் -- சின்னவானுதன்மங்கையீரென்புயஞ்
சேர்மினென்னலோடுமங்கவர்மறுத்திம்மொழியிசைப்பார். (௬௧)

எடுக்கும்பல்புகழெந்தையார்மணவினைமுடித்துக் - கொடுக்கிற்
கூடுதுமென்றனர்முனிவனுங்குணங்கொண் -- டெடுக்குநீருலகத்தி
னிற்கார்ந்தர்வமணமுண் -டடுக்குமென்றனனவ்வுரைக்கவரகமிசை
ந்தார். ... ... ... ... (௬௨)

தனித்துப்பன்மலர்கொய்குவான்சார்தலும்பின்போய் -- முனிப்
பெருந்தகைமாயமாம்விஞ்சையைமூட்டி --- யினித்தசொல்லியர்க்
கொருவருக்கோருருவெடுத்துக் -- கனிந்தசோலையிலானந்தமிகுங்
திடக்கலந்தான். ... ... ... (௬௩)

தோய்ந்தகாலையில்விகனுக்கிடப்புறந்துடிப்ப -- வாய்ந்த குஞ்
சரன்குஞ்சரிவயிற்றினில்வந்தான் -- யேய்ந்தகாலையில்விந்தைநற்று
ர்கணையீன்றாள் - காய்ந்தவெந்தொழிற்பூரிசன்கண்ணிடந்துடிக்க.

இந்திராதியர்க்கசுரராய்ப்பேரிருவிரிப-வந்தருரியரும்மெனக்கமலை நல்வயிறுயிர்ப் - கந்தமாமலர்மேனியன் கமலன்வந்துதித்தான் - சுந்தரிப்பெயர்மங்கைசுந்தரன்றனையின்ருள். ... (௪௫)

கனைகையெய்ம்பவள்கனகனைப்பயந்தனடிலகை - மனமகிழ்ந்துநற்றிலகனையீன்றனள்மகிழ்வால -- பனகர்தங்குலத்தாதகைபரிவுடனீன்று - னகர்சுந்தரவாருமவயமரர்கொண்டாட ... (௪௬)

பெற்றமைந்தர்குத்தேனுவினமுதினைப்பெய்து --- கற்றமாமுனிகைக்கொடுத்தருகயர்கொற்றிக்-குற்றதோதியாலயத்திருவென்றிடவுவந்தார் - மற்றமைந்தரைமாமுனியன்பொடுவளர்த்தான். (௪௭)

கலையனைத்தையுங்கற்பித்துக்கங்கைபங்கரையிற் --- றொலையில்லவிஞ்ஞையரசர்தம்பாலுளச்சுவர்ண - மலையிறென்றுதேர்கரிபரிவாண்முதற்படைக --- லகில்லாமையிலனைத்தையுங்கற்பித்தானமலன். ... ... ... ... (௪௮)

ஆண்டுபத்தின்மேலாவதைக்கண்டபின்முனியும் -- பூண்டவன்புடைப்புதல்வரைப் புகழ்பிட்டாபுரத்தி -- னீண்டசெஞ்சடைக்காரிபாலிறுத்திரன்முகத்தோன் - வேண்டுநாட்டிடைவிரைவொடுபோவதாய்நினைத்தான். ... ... ... (௪௯)

உற்பத்திப்படலம் முற்றும் ஆ விருத்தம் ௱௯௮.

# பகீரதிப் படலம்.

வேறு.

அதுகாலையின்மாமுனிவர்க்கரசு - மதுமாமலர்ச்சோலையின்மைந்தர்களுங்-கதியேதருங்காளியிருந்தரசாள்-புதமாநகர்நோக்கினர்போகுவரால். ... .. ... (௧)

எல்லாளிவிட்டெழுகாவதமேற்-பலாகடந்தனர்பைம்புனலிற்சேல்பாய்திருநாடுகடந்துதமழ்-பால்மேவியபாலைபுகுந்தனரால்.



கார்வந்திடில்வெந்துகரிந்துவிழும் -- நீரென்றிநொவையுநின்றுசுடும் -- தூரந்திரிசூரிபர்சாரவரிற் -- காரம்பொதிபொன்னெனவேகரைவார். ... ... ... ... (௩)

விடமானதுமிழ்ந்துவிடாய்தணியப் -- படர்நீரெனவேவிரைவிற்பருகுந்-தடநாககிழக்குறைசட்டைகழித் - துடனேயதனூடுநுழைந்திடுமால். ... ... ... ... (௪)

கள்ளிக்கிளர்காரகில்பாலைமரங் - கள்ளிக்கனல்பட்டெரிகட்டையின்மேற் - றுள்ளிப்புறவங்கடொர்ந்துவிழுந் - துள்ளிப்புறவெண்சருகிற்கருகும். ... ... ... (௫)

அப்பாலைகடந்தகலும்பொழுதி-லப்பாளிறைவாவியடுத்துளது -- கொப்பானிறையுங்குளிர்சோலையதற் --- கொப்பாலுநெடுங்கடலொத்துளது ... ... ... ... (௬)

சந்தங்கிளர்சண்பகநீள்கமுகஞ் - சந்தங்கிளர்தெங்குதிர்தண்மலரிற் --- கந்தங்கமழ்புன்னைபலாசுகருங் ---கந்தங்கொளரம்பைகலந்துளது. ... ... ... ... (௭)

முத்தீன்முளரித்தடமும்முனிவர் -- முத்தீநிறைகுண்டமுமொய்த்துளது-கத்தூரிவிலங்குகலந்துநெருங் - கத்தூரின்மரங்கண்மணங்கமழும். ... ... ... ... (௮)

கருந்தும்பிகள்கான்மலர்கீண்டியொருங் - கருந்தும்பிரசங்கடல்போலகலும் - பொருந்துஞ்சிறுதும்பிகளும்புயலும் - பொருந்துஞ்சலிலாதுபொதும்பரிடை. ... ... ... (௯)

அக்காவினிடத்தருமாமுனிவர் - மிக்காரெதிர்கொண்டுவிரும்பிவர - மைக்கார்வரைபோல்வருமக்களொடும்- புக்கான்மறையாயிரமும்புகல்வோன் ... ... ... (௰)

சாற்றுந்திமிரப்பகையைத்தடியுஞ்-சீற்றக்கதிர்வாளுறைசேர்த்துவிரைந் - தாற்றன்மிகும்வெய்யவனுமரசன் -- மேற்றிக்கின்வரைத்தலமேவினனல் ... ... ... (௰௧)

வடிவின்மரேசன்மலக்கமுறக் -- கடிதாயெழுகார்விடமானது நீர் — முடியாவுலகங்கணுமுடுதல்போற் - படிமீதுநிறைந்ததுபா யிருளே. ... ... ... ... (௰௨)

தண்ணார்கடலாடைதயங்கியசீர் - மண்மாமகள்வாண்முகமோ க்கலுறக் - கண்ணாடியெனும்படிகாரலைவாய் - விண்மீதிலெழுந்தது வெண்ணிலவே. ... ... ... (௰௩)

ஏர்மேவுமிலங்கையர்வேந்தரெனச் -- சீர்மேவுமிசகந்தனில்வாழ் வுபெறுந் - தார்மேவியசான்றவர்தம்புகழ்போற் - பார்மீதுபரந்தது பானிலவே. ... ... ... ... (௰௪)

முதுமாமுனிசந்திமுடிக்கவெனக் - கதிமேவியகங்கையடைந்தன னால் - மதுவார்புய்மைந்தர்கடந்தையுட - னிதுமாநதியாதெனவே புகல்வான். ... ... ... ... (௰௫)

வேறு.

இந்தமாநிலமுழுவதுமெழுசுடர்க்கதிரோன் --- முந்துதொல்கு லத்தெண்ணிறந்தோர்கள்முன் புரந்தா -- ரந்தநாட்பலகழிந்தபின் னறந்திரண்டன்ன ---- வந்துதோன்றினன் சாகரனென்றொரு மன் னன். ... ... ... ... (௰௬)

அவன்வயிற்றினிலறுபதினாயிரம்புதல்வர் - புவனமெங்கணும்வி யப்புறப்பொலிவினிற்பிறந்தார் --கவனவெங்கழற்காலினான்புதல்வ ரைக்கண்டு - நவமிகுந்தசெல்வத்தொடுநாட்பலகழித்தான். (௰௭)

அன்னவன்குருவசிட்டனோடரசருக்குரித்தாய்ச் -- சொன்னவே ள்வியாதென்றலுஞ்சுருதிநான்முனிவன் -- பொன்னந்தாரிறையசுவ மேதந்தரும்புவியின் — மன்னர்தங்களுக்குரியதுசெய்கெனவலித் தான். ... ... ... ... (௰௮)

தாதையன்னமாமுனிவிகல்சொல்லினைத்தாங்கி - யேதிலிந்திரனு கவேயரசுவீற்றிருக்கக் - காதன்மைந்தர்களறுபதினாயிரர்காக்க - வேதவாய்மையாற்புனிதவாம்பரியினைவிடுத்தான். ... (௰௯)



செல்லும்வேகவெம்பரியினைத்தெவ்வரைச்செகுத்து - வெல்லுமி ந்திரனெதிர்சென்றுவிரைவொடுபற்றி - வல்லைபாதலவரைப்பினிற் கபிலனென்றுரைக்கு — மெல்லையிற்றவமுனிபின்புகட்டியேகின னால். ... ... ... ... (௨௰)

தேடிப்பின்செல்லுங்காளையர்கண்டிலர்திகைத்தார் -- பீடுற்றோங் கெபுவலத்தினைக்கைகொடுபிடுங்கிக் -- கூடித்தோண்டினர்பாதலத் திடைக்குணபாலி -- னீடுற்றோங்கியபோருந்தவன்கண்டுநின்றார் ... ... (௨௧)

நின்றமைந்தருமிவன்செயலிதுவென நினைந்து ---- மின்னிகர்த்த செஞ்சடைமுனிதனக்கிடர்விளைப்ப - கன்றிமாதவன்கனலெழவிழி டபமெய்கருகி - யன்றெரிந்தனரறுபதினாயிரத்தவரும். (௨௨)

மதமலர்ப்புயமன்னனும்விறற்பரிதொடர்ந்து - கதியினாற்சென்ற மைந்தர்கள்வரவுகாணாமல் -- விதியினாலவரேகியவழிச்சென்றுவெ குளி - யதிகமாதவன்கொன்றிடவிறந்தமையறிந்தான். (௨௩)

கவல்மனத்தினன்மன்னனுங்கற்றுணர்முனியோ -- டிவர்பிழைத் ததிங்கென்னெனவினவலுமுனியு -- மவரிழைத்தமையுரைத்தனன ரசனுமறிந்து-சிவனுடைச்செயலிதுவெனமனத்திடர்தீர்ந்தான்.( )

பன்னுமாமறைமுனிவனும்பரிகொடுத்தருள - மன்னர்மன்னனு மானிலவரைப்பினிற்கொணர்ந்து — சொன்னவேள்வியைமுடித்த தன்பயனெலாந்துய்த்த -- பின்னவன்பெறும்போசனன்பெருநிலம் புரந்தான். ... ... ... ... (௨௫)

போசனன்முதலனேகரிம்மாநிலம்புரந்தார் - நாசமில்லவரகன்ற பின்னாற்கடல்சூழ்ந்த — தேசமெங்கணுமனுமுறை நடத்தியதிறத் தான் - வாசமாலிகைமார்பின்பகீரதன்வந்தான். (௨௬)

சுருதிநான்முறைபொன்முடிபுனைந்துதற்சூழக் - குருதிவேன்மன் னர்கைதொழக்குளிர்முத்தக்கவிகை -- பருதிமாநிலமுழுவதுநிழல் செயப்பவனி--வருவதாகவேபெருந்தனன்பகீரதமன்னன். (௨௭)

சிறப்பினால்வரும்வேள்வியிற்கீழ்த்திசைச்சென்றான் -- மறப்பினால்
பொருள்புதைத்துவைத்திழந்தவன்மனம்போ -- லறத்தினாலாவி
ழைத்ததன்பயனதாய்மூண்ட -- இறப்பினாற்கிடந்தெரிகின்றவீமத்
தைக்கண்டான். ... ... ... (௨௮)

எரியும்வெங்கனற்காட்டிலேயாதெனவினவப்-புரியுமாதவவசிட்ட
னும்வரன்முறைபுகல்வா - னரியகின்றலத்தறுபதினாயிரக்குமரர் -
சுருதிகற்றுணர்கபிலனாலிறந்ததிச்சுடலை. ... (௨௯)

சுட்டகாட்டில் வான்கங்கைநீர் தோய்ந்திடிலிவர்க்குக் --- கிட்டு
நன்னெறியல்லதுகிட்டுதற்கரிதால் - முட்டினீர்க்கடலீங்கிவர்தொ
ட்டதுமுன்னாள் - மட்டறுமலர்த்தாரினாயென்றனன்வசிட்டன்.

ஊழிகாண்குறுமலர்முனியம்மொழியுரைப்ப - வாழியெங்குலத்
தலைவர்கணரகத்துவைக - வாழிமாநிலத்தரசெனக்குரியதன்றென
ப்பா-ரேழுங்கைதொழுமைந்தனுக்கரசியலீய்ந்து. ... (௩௧)

கருத்தினாற்செழுங்கமலநான்முகன்றனைக்கருதி - யருத்திமாதவ
மிழைத்தவன்றுங்கவன்வந்து - திருத்தரும்புனற்கங்கையைநோக்கி
நீசெய்கென் - றுரைத்தனன்கங்கைபாறவமுலப்பிலசெய்தான். ()

செய்தகாலையில்கங்கைவந்தொருமொழிசெப்பு — முய்திறமிலை
யான்வரினுலகெலாமழியும் -- நெய்திரண்டசூலாயுதக் கடவுடானி
னைத்தால் — வெய்தினிந்தமேதினியெலாம் பொறுக்கும்வெந்தவத்
தோய். ... ... ... ... (௩௩)

தள்ளருந்திறற்சிவன்றனைநோக்கினன்றவத்தால் -- வள்ளலுந்த
னன்மாநிலந்தன்னிலோர்வகையாற் - றுள்ளிவீழ்ந்திடாவகைதரிப்
பேனெனச்சொன்னான் -- வெள்ளநீர்க்கங்கைபாற்றவமுயன்றனன்
மீண்டு. ... ... ... ... (௩௪)

புகுந்தவானதியுலகுடையான்ரவிபுகழ்போற் - றிகந்தமெங்கணு
ம்விரிந்திந்தச்செகமெலாம்பரக்க -- மகிழ்ந்துசெஞ்சடைக்காட்டி
லோர்மயிர்நுதிமடுத்து - முகந்துகொண்டனன்முக்கணெண்டோ
ளுடைமுதல்வன். ... ... ... (௩௫)



வரந்தனிற்சிறந்துளபகீரதனெனுமன்ன - னிரந்துகேட்பதுகண்
டிறையவனெழிற்சடையிற் - கரந்தகங்கையி லொருதுளியுகுத்தன
ன்கடிதிற் - பரந்துபாய்தலிற்சேடனும்படமுடிநெளித்தான். (௩௬)

புவனமுற்றமாநதிமன்னன்பின்புறப்போந்து -- பவனவேகத்தின்
சன்னுவின்வேள்வியிற்பாய - வவனுமங்கையுளடக்கியுண்டனனது
கண்டு - சிவனளித்ததென்றம்முனிக்கறிவுறச்செப்ப.... (௩௭)

பொன்னந்தாரினான்வருந்தியேபுகல்வதுகண்டு - மின்னுஞ்செஞ்
சடைமுனிவனுஞ்செவிவழிவிடுத்தா - னின்னிலத்தினிலறுபதினாயி
ரரெரிந்த - வன்னியாறிடப்பாய்ந்ததுவான்வருகங்கை... (௩௮)

பாய்ந்தெலும்புகணனைதலும்பகீரதன்குலத்தோர் - வாய்ந்தநற்
கதியடைந்தனர்நதியொருவழிக்கொண் - டேய்ந்துபாய்ந்திடிற்கட
ல்பொருதென்றுலகிரங்க - வாய்ந்தமாநதிபாய்ந்ததாங்காயிரமுகத்
தால். ... ... ... ... (௩௯)

பாரகத்தினிற்பகீரதன்றவத்தினாற்பரந்து - சார்தலிற்பகீரதியெ
ன்றுஞ்சன்னுவின்செவியின் -- றேர்படைத்துவந்திடுதலிற்சானவி
யென்றும் -- பேர்படைத்ததுதோய்ந்தவர்பெரும்பயன்புகல்வாம்.

கண்ணிற்கண்டிடிலைந்துவல்வினைத்தொழில்கழியு - மெண்ணித்
தோய்ந்திடினினைத்தவையிம்மையினெய்து -- மண்ணிற்பல்லுயிர்த்
தொகுதிகளளப்பிலவந்து - நண்ணித்தம்முயிர்விடில்பிறப்பிலையொ
ருநாளும். ... ... ... ... (௪௧)

பாலைநேர்புனற்கங்கையின்வரவெலாம்பகர்ந்தான் -- சீலமாதவ
னெழுவராஞ்சிறுவர்க்குச்செறியும் - மாலைநீங்கிடவல்லிருண்மாய்த
ரவெழுந்தான் - வேலைமாமகள்மார்பினன்மணியெனவெய்யோன்.
... ... (௪௨)

பகீரதிப்படலம் முற்றிற்று. ஆ திருவிருத்தம் ௱அ௰.

24083

# கையடைகொடுத்தப் படலம்.

முனிவனுஞ்சந்திவந்தனைத்தொழிலெலாமுடித்துப் - பனிகொள் சோலையின்மாதவர்விடைகொண்டுபாரிற் - றனியினைமைந்தர்களை மூவரும்விடாதுபின்றொடரப் -- புனிதவாவிரும்பிறதிட்டாபுரத்தினிற்புகுந்தான். ... ... ... (க)

கன்னிமாநகர்ப்பொலிவெலாஞ்சிறுவர்க்குக்காட்டி -- யின்னிலத்தினிலின்னகர்க்கொப்பிலையென்று - பொன்னின்மாநகர்ப்படிநரு லகெலாம்புகழ - வென்னையாட்கொண்டவிறைவிதன்முன்புசென்றெய்தி. ... ... ... ... (உ)

வேறு.

மன்னுகாருகரிமேவுவடவாமுகமென்ச் - சென்னிநீறுபடர்செஞ் சடையிலங்கமதியா -- மென்னுய்வானுதலிலொற்றைவிழியங்கியெரியக் - கன்னிவாரியலையொத்தபுருவங்கள்கவின. ... (௩)

மண்ணிருண்டுவருமூழியிருண்மாயவொளிரும் - கண்ணிரண்டுமிருசெஞ்சுடரெனக்கவினுறு - மெண்ணிறந்தமணம்வீசுருமிழ்நாசியிலக - விண்ணிருந்தநிலவொத்தசிறுபன்மிளிரவே. ... (௪)

கனைகருங்கடலிரண்டுபிறைகவ்வியதென - முனையிரண்டொளிர் முறுக்கெயிறிரண்டுகடைவாய் - தனியிலங்கமிளிர்சங்குநிறைதோடமுகுறப் - புனைநெடுங்குழையசைந்துபுயமீதுபுரள. ... (௫)

யானையாளிமுகவாகுவலையங்களிருதோள் - மேனிலாவநெடுமூன் கையில்விடங்கொள்பருவாய்க் - கானில்வாழரவகங்கணமிலங்கவிரலிற் - றீநிலாவுசிகைபோலருணவாழிசெறிய. ... (௬)

நீலமார்பின்மணிபொன்பதுநிரைத்தகனகக் - கோலவாரமொளிமின்னவிணைகும்பமுலைமேற் -- காலஞாயிறுவழங்குகதிர்கார்வரைகளின் - மேனுலாவியதுபோல்வீசுகச்சுமிளிர. ... (௭)

மூட்டிலாவுதரபந்தனமிறுக்கிமுடியிட் - டொட்டியாணமதன்மீ



தினிலணிந்தொழுகுபொற் -- பட்டிறுலுடைபுனைந்துநவமணிகள் பதிபக் - கட்டுமேவுமணிமேகலைதழைந்துகவின. ... (௮)

பாடகந்தனிபுனைந்துபடிதாங்குமுடியி - ஞடராமணியணிந்தசிறுதண்டையசைய - வேடுலாவுமலரோன்முதலதேவரெவருந் - தேடுதாள்புனைசிலப்புகள்சிலம்பியொளிர. ... ... (௯)

கந்தநாறுமலர்கற்பகநறுந்தழைகொணர்ந் -- திந்திரேசன்முதல் வானவிறைஞ்சிமறையின் -- மந்திராகமமிபம்பிவருபூசைமுறையாலந்திசந்திவழுவாதுபுரிவார்களனுகி. ... ... (௰)

பன்னகாதிபரியக்கர்பயில்விஞ்சையரிசைக் - கின்னரேசரொடு கிம்புருடர்வந்துமுறையிற் --- சங்கிதத்தொழிலினைவறவருதுபயிலப் - பொன்னிதழ்க்கமலவேதன்மறைநூல்புகலவே. (௰௧)

மஞ்சளாவுதிருமேனிநெடுமாயன்வடிசெம் - பஞ்சுபோலுபயபாதகிணைவிற்பணிவுறச் - செஞ்சடாடவிமுடித்தலைவர்சேரவொருபா -- லஞ்சலித்தருவிகைக்கமலவானடரவே. ... (௰௨)

வாயுவானவருகுத்தமலர்வாரியெறிபப் - பாயுநீர்வருணனார்விசிறவாயிற்பழகுந் - தேயுவானவன்விளக்கிறொடுசேரவறியோர்க் - காயநீள்கனகராசியளகேசனருள. ... ... (௰௩)

கொள்ளிகொண்டுசுழல்பேய்களொருகோடிநிருதக் - கள்ளவஞ்சகர்கருந்தலைகடித்துடல்பிளந் - தள்ளியுண்டெறிபிணக்குவைகழிந்தருகெலாம் --- வெள்ளெலும்புமலைவெள்ளிமலைபோன்மிளிரவே. ... ... (௰௪)

எண்ணில்பேய்கள்பலவாய்முழைசொரிந்தவெறியாற் - கண்ணி ஞலைகிற்பேய்கள்சொரிவெங்கனலினுன் - மண்ணுமாதிரமும்வானுலகுமேழுகடலு - நண்ணுமூழியிருளுஞ்சரியகாளுமிளிர. (௰௫)

பொன்னினம்பலகையிற்புதுமணித்தாள்பொருந்தி -- இன்னிலத்திசையிலெண்மரொடுவானவர்களும் -- பன்னகேசருமுடித்தலைக்கவுயரு - மின்னினன்னவரிபாசனமிருந்தியதன்மேல் (௰௬)

மேருமால்வரையோராயிரமுடிக்குவையின்மேற் - சேருமால்கட லனத்தனியிருந்துசெகமும் - பாருமீன்றமுதனுயகியையெஞ்சோ பெணிங் - தாருமாதவனுமன்பினெடுவெந்தனைசெய்வான். (௰௭)

வேறு.

ஆதியுலகிலனைத்துயிருமீன்றெடுத்து - மாதர்வயதுமுதிராமடப் பாவாய் -- காதலானின்னைவிரும்புகின்றகண்ணுதறன் - பாதியுட னீத்திங்குவந்தவுன்பரிவென்னே. ... ... (௰௮)

பத்திச்சடையும்படருநுதல்விழியும் — முத்தலைச்சூலகபாலமு முன்னுடையாய் - சித்திவினைக்குந்திறத்தாற்சிவனுருவோ -- சத்தி யுருவோதமியேனறியேனே. ... ... (௰௯)

சங்கமுஞ்சக்கரமுந்தண்டும்வில்லும்வாளுஞ் -- செங்கைதரித் தாய்திருமேனியுங்கருத்தாய் -- கொங்கார்துழாய்முடித்தாய்கொ ண்டலுலகளித்தா - யங்கண்மாணீயோவடியேனறியேனே. (௨௰)

அன்றொருருவாயரனிடத்தில்வந்துதித்தாய் -- பின்றுதவைந்து ருவாய்ப்பின்னுமுருவெடுத்தாய் -- பொன்றுவுலகினுயிர்தோறும் புக்குறைந்தா - யொன்றோபலவோவுருவமுணரேனே. (௨௧)

என்னையினிநீன்றவன்னையருமெண்ணில்லார் -- முன்னையுளதக் கையரையெண்ணிமுடியாதா — னின்னிருதாட்கண்டுகினைந்தே னொருக்காலும் - பின்னையுலகிற்பிறவேன்பிறவேனே. ... (௨௨)

மட்டார்கமலவதனத்தாய்மாலயனுக் -- கெட்டாமணின்றவிள ங்கொடியேதேடுதற்குங் -- கிட்டாமரகதமேகேடிலாப்பொற்கொ ழுந்தே - பிட்டாபுரத்தியெனும்பேர்பெற்றபேரொளியே. (௨௩)

இன்னபலபன்னியிறைஞ்சியடிவணங்கிச் -- சன்னதியிலவித்தியா தரமுனிவனிற்பளவில் - முன்னையுலகீன்றமுதல்விதிருவுளமி - வன்ன மலர்வாய்மலர்ந்தோர்மொழிபுகல்வாள். ... (௨௪)

வாய்ந்தவனத்தில்வளருமிளமைகுன்று - காய்ந்தவரியேறென்னக்



காமக்களிறென்னச் - சாந்தகலாமார்பத்தார்தண்டார்விளமைதிக ழேந்துதடந்தோட்குமரரிவராரென்றாள். ... (௨௫)

மின்வந்தசூலப்படையாயிம்மேதினியோர் -- கன்மந்தவறுதென வுரைக்குங்கட்டுரையால் - தன்மந்தலைசிறுத்தத்தக்கராய்வந்துதி த்தா - ரென்மைந்தர்கின்னிருதாளேத்துமுரிமையினர். (௨௬)

மன்னுமறைமுதல்விமைந்தரெழுவருட - னென்னருகில்வந்தப ரிசென்னென்னவீங்கிவரைச் -- சன்னதியினின்னடிமையாக்கிச்சது முகத்தோன் — பொன்னுலகிலிப்பொழுதுபோவேனெனவுரைத் தான். ... ... ... ... (௨௭)

பேதையறிவிற்பிழைத்தனரேயாயிடினும் — நீதிமடமானேகின் முனிவுக்காற்றார்கள் -- போதம்வரநீபொறுத்தருளவேண்டுமென காதன்முனிசிறுவர்தம்மையவள்கைக்கொடுத்தான். (௨௮)

மங்கைகினைவில்வருகாரியமுணர்ந்தா -- ளிங்கிவராலெய்தும்பய னெளியதல்லவால் - பொங்குதவத்தோய்நீபோய்வருகவேவலியாற் சங்கையில்லாரென்மைந்தர்தாய்நானிவர்க்கென்றாள். (௨௯)

சித்தமகிழ்ந்துசிறுவர்முகநோக்கி -- யெத்திறத்துமன்னைமுன்னி யேவுந்தொழில்செய்க -- வித்தகத்தீர்நீர்கினைக்கும்வேளைவருவனெ னப் - புத்திபலபுகன்றுபோனனம்மாதவத்தோன். ... (௩௰)

கல்லாதவிஞ்சைமனுபற்பலவுங்கற்பித்தா - ளெல்லாவுலகுமிவர்க் கொப்பாரில்லையென - நல்லாள்பிட்டாபுரத்திநாளுந்தனதுயிர்போ ல் - மல்லார்புயத்தெழுவர்மைந்தர்தமைவளர்த்தாள். ... (௩௧)

குஞ்சரற்குச்சூலங்கொடுத்தாள்துரகனுக்கு -- மஞ்சுபொதிகே டகமும்வாளுங்கொடுத்தனளால் — கஞ்சமலர்க்கட்கமலனுக்குப் பாசமுடன் - மிஞ்சுசுடராசுகமும்வேலுங்கொடுத்தனளால். (௩௨)

வந்ததிறற்சுந்தரற்குமாயக்கணைகொடுத்தாள் -- முந்துகன்கற்கு முன்னுளரன்றனக்குத் --- தந்தகதைகொடுத்தாள்தண்டார்திலக னுக்குக் - கந்தமலரோன்கடுங்கணையைக்கற்பித்தாள். (௩௩)

மன்னுநிறக்கரவரூமனமகிழப் -- பன்னகவெம்பாசப்படை
கொடுத்தாளவ்வவர்க்கு -- பின்னுங்கவசமுடன்வேண்டுவனவீய்ந்
தாள் - கன்னிபொருதாருகன்முன்றோர்கள்வலிகவர. (௩௪)

தாழ்வில்வரையுந்தருவும்வளம்பமகா -- வாழிகிலங்கிமேழுமாகா
யமும்புகுத -- வாழிபனுவாய்மலைபாயுநவெடிப்ப - வேழுலகமும்
புகழவீந்தாளெழுவருக்கும். ... ... (௩௫)

கள்ளார்கடுக்கைபுனைகாளிதிருத்தாள்போற்று --- மெள்ளாத
வெள்ளமோரேழாயிரமென்ன -- வுள்ளாநபூதங்களோரொருவற்
காயிரமாய்த் - தள்ளாதவெள்ளத்தலைவரெனவளர்ந்தார். (௩௬)

கைப்படைகொடுத்தபடலமுற்றும். ஆ விருத்தம் ௨௱௰௬.

# தாருகன் வதைப் படலம்.

தாருகனிபற்றுங்கொடுமையால்வெருவித்தருகிழற்பொலியும்வா
னவரும் -- வாருதிப்பெருக்கின்மத்தவெள்ளானைவருகரும்பாகனு
மகன்ற - பாரிடைமுனிவரனைவருங்கருந்காட்பதுமவீட்டுறைசது
முகனும் --- மேருமால்வரையினுச்சியினடுவண்விரைவொடுவந்து
கூடினரால். ... ... ... ... (௧)

வந்தவானவர்களபன்முகநோக்கிவஞ்சகன்தாருகன்செயலா --
லொந்தனமினிமேற்றுங்குதலரிதுநொடிவரைகயிலைமால்வரையின் -
முந்திநாமேஎயரன்றிருவடியின்மொழிந்திடிலன்னவனுரைந்த ---
புந்தியினொழுங்கினொழுகுவதல்லாற்புகல்பிறிதில்லெனவுரைத்தார்

இத்திறமுணர்ந்தசதுமுகக்குரிசிலெழுந்தனன்முனிவர்தற்சூழ --
முத்திறத்துலகுந்தொழவெள்ளிவரையின்முடியிடைவிரிந்தசெம்ப
வளக் - கொத்துறுசடைக்காட்டொடுமுளைத்தெழுந்தகுருமணிமா
ணிக்கமலைபோல் --- விந்தகனிருந்தசந்நிமுன்னர்விழுந்தடிபணி
யுமவ்வேலை. ... ... ... ... (௩)



பாதிவெண்பிறைவான்கங்கையம்புனலிற்பழுமரத்தோணியிற்ற
வழும் -- சோதிசேர்பவளக்கொடிச்சடைமுடியான்சுரர்முதலயன்
முகநோக்கி --- யாதுகாரணத்தாலென்னுழைவந்ததிபம்புகவென
வயன்றொழுது - நீதுடைக்கொலைசெய்தாருகவசுரன்செயலெலாஞ்
சொல்லுவான்றுணிந்தான். ... ... ... (௪)

தெள்ளுபாற்கடலின்மஞ்சனமாடிச்சேடகாட்டின்னமுதருந்திப்-
பள்ளநீர்சூழ்ந்தபுவியிடையுலாவிப்பாழிமாமேருவினுச்சி - நள்ளி
ருந்தமரர்கைதொழவரசுகடாத்திவிண்ணுலகிடைப்போந்து - கள்
ளவிழ்கூந்தலரம்பையராடக்கண்மலர்களிப்புறநோக்கும். (௫)

பாதலமேழுமத்தலத்துறையும்பாந்திபாவனைவரும்வரைசூழ் --
பூதலமுழுதுமன்னிலத்துறையும்புனிதரேமுதலபல்லுயிரும் - நீதி
லாவுலகமனைத்துமவ்வுயிரிற்பிறந்தபல்லுயிர்களுமற்றுஞ் -- சோதி
யாயவன்றனாணையினின்றுசொன்முறையேவல்கேட்டடங்கும் (௬)

தினகரனுதித்துமறையும்வான்கிரிகள்செவ்விசேருருகுழைக்கமை
ந்த - கனகருண்டலமாயணியும்வால்பிடித்துக்கைகொடுசுழற்றுந்தி
க்கயத்தைத் - தனதிருகணைக்காலளவெனவிறங்கிச்சகரர்நீர்வேலை
யைக்கடக்கும் - மனநினைந்தொருகையதுகொடுவாரிவாரிவாய்மடுக்
கினுமடுக்கும். ... ... ... ... (௭)

உலகமீரேழுமவன்பெருந்திறலேயோதுவதவன்பெயருரைத்தே
- யலகில்வானவர்களாகுதிவேட்பதருச்சிப்பதவனிருதாளே -- குல
விலாவொருதாள்பெயர்த்திடில்வையங் குயமகன்றிகிரிபோற்சுழலு
ம் - பலகுலவலரகனெரிபடக்காலிற்பந்தெனவிரைந்துகின்றெற்றும்
... ... (௮)

சிந்தையினுணராவகைமறைந்தெளியேந்தேவ கின்சன்னிதிபுகுந்
தோம் -- வந்தவாறறியின்கிரைபடவிருத்திவாளினொற்றலைகளைத்து
ணிக்கும் - கந்தவார்குழலார்கலவியிலேனுங்கருணையென்பதுசிறி
தறியான் -- முந்தநாளிலஞ்செய்கன்மமோசிற்றமுழுதுமோருருவ
மைந்தனையான், ... ... ... (௯)

மாதிரவரையும்சேமிவான்கிரியும்வருகடைபஞ்செனவுருள -- ஆ
றுவனுலகமனைத்தையும்கிறுத்தாலொப்புருமேனியன்றவத்தா-லா
நிரட்பெற்றவரத்தினுலெவருமமரினுல்வெல்லுதற்கரியான் - நீதி
லாமாயன்வெருவலான்மறைந்தான் றேடினேமின்ன முங்காணேம்.
... ... (௰)

என்றவாய்மொழி கேட்டிறைவனுந்தக்கனியற்றிய வேள்விடைய
ழிப்பா - னன்றெனநிடப்பாகத்தினிற்சிறந்தவாயிழைபிறந்திட்டாபு
ரத்தி-லொன்றியபூதப்படையுடனிருப்பாளுமதுசிந்தையிற்றுயரெ
ல்லாஞ் - சென்றவட்குரைமினென்னவானவர்கள்திருந்துபிட்டாபு
ரம்புகுந்தார். ... ... ... (௰௧)

முக்கண்மாதங்கிதாடொழுதரன்பான்மொழிந்தவையனைத்தை
யுமொழிந்தா - ரிக்கணமேகியவன்றனைக்கொல்வேனென்றனள்கா
ளியுமச்சொ - லக்கணமசுரன்சாரணர்கேட்டங்கறிவித்தாரசுரனு
ங்கவனு - மிக்கவெந்தீயினென்னெயிட்டனையவெகுளியனின்ன
னவுரைப்பான். ... ... ... (௰௨)

அமைச்சரையழைத்தான்வந்தனரசுரனன்னவர் தம்முகநோக்கி
- யிமைப்பிலாநாட்டத்தவர்செயலனைத்துமியம்பினனன்னவருரை
ப்பா - ருமைக்கொருபாகத்தவனுமாயனுமும்பருமுனிவரும்வரி
னுஞ் - சமைத்தவெம்போரிற்சாமிதன்வில்லிற்றருங்கணையொன்றி
ஞற்றடுக்கும். ... ... ... (௰௩)

வேறு.

தாருகன்சண்டை.

வலியினுற்புகல்மந்திரம்பிணிப்புறமாயு - மொலிகொள்வாருதிகில
த்தினிலொருவன்கைக்கொடுக்கும் - பலிகவர்ந்துனும்பசாசினமன்
றிமற்றுண்டோ - வெலியினம்பகைத்தரவினேடெதிர்க்கிலென்செ
ய்யும். ... ... ... ... (௰௪)

மண்ணனைத்தையுமொருகையால்வாரிவாயிடுவ -- னுண்ணுநீர்
கசைக்குலகுசூழ்கடலெலாமுண்ப - னண்ணலக்கினியக்கனென்ப
வனவன்சிறக் -- கண்ணெரிப்படு பஞ்சன்ருே காளிபேய்க் கணங்
கள். ... ... ... ... (௰௫)



கருந்தடங்கண்ணிகாளிதன்காவலாயுலகி-லிருந்தபேய்களேழா
யிரவெள்ளமுமெதிர்க்கில் - வருந்துபோரெனிற்சலிப்பிலாவச்சிரபு
யத்தா -- னருந்துவானெனிலொருபொழுதுணவினுக்கமையா.
... ... (௰௬)

மருவுபோரில்முப்பத்துமுக்கோடிவானவரு -- மருகுசேர்ந்தநா
ளாளிவேகத்தன்வெங்கரத்தா - விருப்புபங்களுமரவின்வன்பாசமிட்
டிறுக்கப் -- பொருகளத்தினிற்பிணிப்புண்டாரென்பதும்பொய்
யோ. ... ... ... ... (௰௭)

திக்கில்வான்றலையடிபடச்சேடன்வால்தூக்கி - கைக்கடுப்பினிற்
சுழற்றியபாநுவேகத்தன் -- மைக்கருங்கொண்டல்வாரிவாயிடுமதி
தீரன்-றெக்கவெஞ்சமர்க்கிச்சையானுலகெலாஞ்சுழல்வான் (௰௮)

படித்தலத்திடைபத்துநாலாயிரவெள்ள -- மடுத்தவல்லசுரேச
ருண்டாழிசூழுலகை --- யெடுக்கவேண்டிடிற்றனித்தனியொருகை
யாலெடுப்பர் - கெடுக்கவேண்டிடில்வடவையையூதியேகெடுப்பர்.
... ... (௰௯)

எண்ணினம்பகையெழுவரும்படைபிடித்தறியார் - பண்ணில்வெ
ஞ்சமர்க்கருத்திலர்சிறுவர்கள்பார்க்கிற் -- பெண்ணொடும்பொரும்
போரெனப்பெருந்திறல்வெள்கி - யுண்ணினைந்துநம்வயவர்களுடல
முட்குவரால். ... ... ... (௨௰)

என்றுரைத்தனரமைச்சருமித்திரமுணர்ந்து - நன்றுநன்றெனவி
யந்தனனம்படையனைத்துஞ் -- சென்றுவானவர்திருநகரழிக்கவெ
ன்றுரைத்தா-னன்றெழுந்தபோரார்ப்பினுலாழிவாயடங்கும். (௨௧)

நீலமால்வரைமருங்கினிலிளவெயினிறைந்த -- கோலமாமெனக்
கச்சையிலார்த்தனன்குடுமி - மாலைமால்மரகதவரையருகில்வாளரி
வாழ் - சீலமாமெனப்பொன்னுடைவாளரைசேர்த்தான். (௨௨)

அரசர்பொன்முடிபொருதழும்பலங்குபூந்தாளில் -- கிறைசெய்
பொற்கழல்கட்டினனீலமாகடலில்-- விரைசுகார்விடமுருவமைந்த
னையமெய்யடங்க-வுரைசெயுங்கருங்கவசமுமிறுகயாப்புறுத்தான்.
... ... (௨௩)

N 5926 N14 244083

விற்றவிழ்ந்தபொன்மேருமால்வரையிடைவிளங்கச் - சுற்றும்வா
ளரவாமெனக்கங்கணஞ்சுற்றிச் - செற்றும்செம்மணியாழிகள்செறி
ந்தநீள்கரத்திற் -பற்றுங்கோதையுஞ்சிக்குறவிசித்தனன்பதகன். ( )

செஞ்சிலைக்கமர்நஞ்சியுமழுநாக்நெருக்கி -- நெஞ்சுபொன்முடிப
ணோந்துகல்விரிகதிர்விளங்கு — மஞ்சனக்குன்றமெழுந்தெனவானவ
ரஞ்ச - வெஞ்சிலாவலித்தாருகன்சமர்க்கெனவெழுந்தான். (௨௫)

காற்றினுங்கடுவிசையெனக்கடலெலாங்கடப்பச் - சீற்றவாளரி
யஞ்சுநூற்றிரட்டியிற்செறிந்த- வாற்றல்சானெடுந்தேரின்மேற்கொ
ண்டனனடங்கிச் -- சீற்றமின்றியேசேடனுஞ்சுமைபொறுதனுக்க
... ... (௨௬)

தூண்டுதேர்நிரைபத்துநூறுயிரஞ்சூழ்ந்த --வாண்டவெங்கரியி
ரட்டியங்கவற்றினுக்கிரட்டி - மாண்டகொய்யுளைக்கடும்பரிவயவர்
தம்வெள்ளம் - பூண்டபத்துநாலாயிரத்தொகையெனப்புகல்வார்.
... ... (௨௭)

சங்கமார்த்தனபேரிகையார்த்தனதழங்குஞ் - சிங்காரதமுஞ்சிலை
யினுணெலிகளுஞ்சிலம்ப - வங்கவ்வசுரேசர்காற்செறிகழல்களுமா
ர்த்த-மங்குல்வல்லுருமேறெனவார்த்தனவாசி. ... (௨௮)

சூழியானைகண்முழங்கினதொகைப்படுநெடுந்தே - ராழியாழியி
ன்முழங்கினவாளரியார்த்த --- வாழிவெஞ்சமர்வயவர்கள்வாய்ப்பு
டைப்பார்த்த - வூழிமாருதவொலியெனமாதிரமுலைய (௨௯)

கொடியிடைத்தனகுடையினங்குழீஇனசெம்பொ - னெடியதொ
ங்கலும்பீலியுநெருங்கினவெய்யோன் - கடியவெங்கதிர்மறைந்தல
கிருண்டனகண்டார் -- முடிகண்மின்னலால்முதுநிலமிருள்றவிள
ங்கும். ... ... ... (௩௰)

வானெழுந்துயர்கனமலைமண்மலையான -- மேனிவந்தபொன்னு
லகுமன்னுலகெனவிரிந்த - வானதண்கடல்மண்கடலாகியதன்று -
போனசேனையின்றூளிபேருலகெலாம்புகுத. ... (௩௧)



வெம்புகண்டகர்கட்கடைவிரிந்தசெங்கனலும் - பம்புபல்படை
க்கனல்களும்பாழிமாலானைக் — கொம்பராவியவங்கியுமிடந்தொ
றுங்குழுமி - அம்புராசிமின்வடவையங்கனலுமாமனனும். (௩௨)

இனையதன்மையநிசாசரன்விண்ணுலகெய்தி- முனையுடைப்பெரு
ந்தேவர்களோடுபோர்முண்டா -- னனையவானவராகுலித்தழுதன
ரழுத—கனசெருங்குரல்கேட்டனள்குலக்காள். ... (௩௩)

கேட்டகாலையிலொற்றரைவிடுத்தனள்கிளர்வா — னூட்டுவானவ
வர்துயரெலாம்விதிமுறைநாடி —மீட்டும்வானவருரைசெயவெகுளி
மீக்கொண்டா—வீட்டுபோர்க்கருத்தினர்மைந்தரெழுவரையழைத்
தாள். ... ... ... ... (௩௪)

அம்பரத்தவர்நம்மினத்தவரெனவடைந்தார் - நம்புவாய்மொழி
நாம்புகன்றளவையினடந்தார் - கம்பமாக்களிற்றசுரர்தமாண்மை
யாற்கலங்கி - யும்பர்லோகத்திற்றரிப்பிலராமெனவுலைந்தார். (௩௫)

வந்தடைந்தனர்முன்னமேபுகலெனமதித்துஞ் - சிந்தைவெந்து
யரெம்மினுற்றீர்ப்பதற்காக - வுய்ந்துபோம்வழிதேடுகவேறெனவு
ரையே — மந்தநாளுமக்கியாமுளமெனவலியுறைந்தேம். (௩௬)

உண்மையாமெனவிருந்தனரின்றுதொட்டுயர்ந்த —, வண்மையி
ல்லவன்றாருகன்சமர்க்கெனவந்தான் — றிண்மைகொண்டவண்ட
டுத்திலேமெனிலெமைச்சிறுமைப் - பெண்மதிச்செயலாமெனநகை
ப்பாரற்பெரியோர். ... ... ... (௩௭)

ஈதுகாலத்துச்சிக்குறத்தடுத்திலோமென்னி -- னூதைவாய்ப்படு
துகளெனவும்பரையழிப்பர் - மாதுபாகனுமன்னவர்க்கொலைசெய
மதியான் - யாதுநுங்கருத்தென்றனள்குஞ்சரனிசைப்பான். (௩௮)

ஈரமற்றவன்செயலினுக்கொருவனுள்ளிடைந்து - சேருமங்கவன்
சிறுமைதீர்த்துதவிலானென்னி — லோர்பெரும்பொறைபுவிக்கவ
னொருவனேயவற்கே - பாரிடைக்கொடுநரகோடுபாவமும்பழியும்.
... ... (௩௯)

உதவிகொன்றவனுய்யினுமொருவன்கைப்பொருளை - யிதமலா மையிற்கவர்ந்துளோனுய்யினுமீன்ற — சிதைவிறந்தையைச்செகுத் துளோனுய்யினுஞ்சிதையாப் -- பதவிசையடையிழந்தவற்குளதெனப்பகரார். ... ... ... ... (௪௰)

சூலபாணியோர்மாணவ[illegible]லங்க - காலனையிர்க் காலனுயழித்ததுங்கண்டே - மாலமுண்டுவானவர்தமையளித்தது மறிவே - மேலுமித்திறமஞ்சிடினமைபுலகிழும். ... (௪௧)

தாண்டுவெஞ்சமர்க்கிச்சையாய்த்தனித்தனிபொருவர் - வேண் டியண்டங்களனைத்தையும்விளங்குவர்கொலையிற் - பூண்டகங்கண த்தாருகன்புழுங்கியசெயலா -- லாண்டொழிற்குலேந்துலகெலாந்த னித்தனியுழல்வார். ... ... ... (௪௨)

எங்கடமவ்விதமிற்கமற்றிறைவிநீயளித்த - துங்கவெம்படையுண் டதன்வலிசொலற்கெளிதோ -- வங்கதன்பெரும்வலிமையாலயன் முதலுயிருஞ் - சங்கபாணியுஞ்சமர்க்கெளவரிவிறைதவிர்ப்போம். ... ... (௪௩)

நிறைத்தமுத்தலைச்சூலமுநின்கையினிருக்க - விரித்தவாளரியூர் தியாயிருநிலத்திருக்கக் -- கரித்தசொல்லினுற்கவலனீயென்றுதன் மைந்த - னுறைத்தவாய்மொழிகேட்டுவெந்தாளுலகுடையாள் (௪௪)

எழுகவம்படையென்றனள்வார்முரசேற்றி - வழுவில்வள்ளுவரழைத்தனர்வந்தனசேனை - குழுமுபேருலகழியுநாட்குவலயமுழுது - மொழுகுநீர்க்கடல்கரையிகந்துவாவெழுந்தென்ன. (௫௫)

கட்டினார்கள்பொற்கவசமுந்திசைக்கரிக - ளெட்டிலொன்றெழுத்தெழுக்கும்பூண்விசித்தென்ன - விட்டபொன்முடிபுனைந்தனரெழுவரையுதித்த - மட்டிலாதவரைவருமொழியமற்றவர்போல். (௪௬)

ஆரமிட்டனரசுரருக்குடைந்துகோளனைத்துஞ் — சார்பினால் வந்துமார்புறத்தழுவியசெயல்போற் -- சிருடைப்பெருங்கட்களற்கைவளைந்தென்ன — வீரபட்டமுஞ்சுட்டியும் நெற்றியில்விசித் தார். ... ... ... ... (௪௭)

கச்சிறுக்கினர்வச்சிரமருங்கினிற்கருத்தி - லச்சநீங்கினர்வானவர் கங்கணமணிந்தார் -- நச்சராவுடல்சுற்றியமராமரம்நாண -- வுச்சித்தடற்றெணறிகோதையாப்புறுத்தார். ... (௪௮)

[illegible]வர்க்கழுதெனக்கொடியதானவர்க்கு - விறைகொள்வல்விடமெனவொலிகருங்கழல்விசித்தார் - பிறையுறைந்தசெஞ் சடாடவிப்பிறதிட்டாபுரத்தி - விறைவியீந்துளகடவுண்மாப்படை பலவெடுத்தார். ... ... ... (௪௯)

விழுங்கொழும்புனன்மதமெனமின்மருப்பென்னச் -- செழுங்கு ரற்படவொலிப்பதுதெவ்வொலியென்ன - வெழுந்துகொண்டலைப் பண்டையப்பகையெனவேறு -- வொழுங்குடைக்கரமிலாமையின் மனச்சினமொடுங்கும். ... ... ... (௫௰)

எற்றுதண்டெனமேருமால்வரையிடந்தெடுக்கு - மற்றநானிலம சைந்திடப்பழுதெனமாறும் - கற்றழுங்குசூற்கொண்டலைக்கண்டை யாயணியும் - பற்றிநீலமால்வரையொருபகையெனப்பாயும். (௫௧)

அஞ்சிரட்டிமாகிரத்தினுமண்டத்துந்தன்கைச் — செஞ்சரத்தி னுங்காலினுஞ்செல்வதுசெறுநர் — துஞ்சரத்தவான்கோட்டது வெண்ணிறஞ்சூழி — குஞ்சரத்துவான் பிடர்மிசைக்குஞ்சரன்வந் தான். ... ... ... ... (௫௨)

ஒருதைப்பினிற்குலகிரியெட்டையுமுருட்டு -- மூரிவேகத்தான் மனகதிபிற்படமுந்தும் -- மேருவெற்பையுந்துகள்படச்சாரியின்மிதிக்கு - மாருதத்துரகதத்தின்மேற்றுரகனும்வந்தான். (௫௩)

மஞ்சளாவியமெய்யனவானினுஞ்செல்வ --- வஞ்சிரட்டிநூறும் பரிவிசித்துளதகன்ற - மஞ்சுதேரின்மேலேறினன்வானுலகுய்யக் - கஞ்சநாறியமேனியன்மேனிமாக்கமலன். ... (௫௪)

மந்தரப்பெருங்கிரியொருவன்கையால்வாங்குஞ் -- சிந்திடக்கடலேழையுந்தாளினுற்சிந்து - நந்திலாவலிப்பூதமோராயிரநடத்துஞ் சுந்தரத்தடந்தேரின்மேற்சுந்தரன்வந்தான். ... (௫௫)

பனகபாசத்தாற்பிணித்துளநுகக்கழிகோலில் - தினகரோளையை
கிரிக்குவுடிடந்தனசேர்த்துப் - புனைபசாசினமஞ்சுநூற்றிரட்டியிற்
பூண்ட - வைகமாமணித்தேரின்மெலேறினன்கனகன். (௫௬)

வீரவாளரிகான்கிரண்டாயிரம்விசித்த — தேரிலேறினன்றிலக
னுந்திசைக்கரிவெருவும் - நீரயாளிமூவாயிரம்பிணித்துளதேரிற் -
பேரினேர்வுறவேறினன்சுந்தரப்புயத்தான். ... (௫௭)

வனையும்பேரணியணிந்துதம்மன்னைமுன்வந்தா -- ரனையமைந்த
ரையுவந்தனளாழியிரெனுவிக்குங் -- கனைகருங்கழல்கட்டினள்கவச
மும்புனைந்தாள் -- முனைகொள்முத்தலைச்சூலமுமெடுத்தனள்மு
லைந்து. ... ... ... ... (௫௮)

ஏறுவாளரிதருகவென்றிசைத்தனளிரண்டு -- சீறுநாசியிற்செழு
ம்புகைப்படலைகடுங்க - மாரிலாவிழிக்கடைகளின்வடவனறாங்கக்
கூறிலாநெடுங்கொய்யுளைப்பிடரிடைத்தூங்க ... (௫௯)

மிஞ்சுபோர்க்கெனவுரைத்தலுமிகமனமகிழ்ந்து -- குஞ்சுமீறிப
முட்டையிற்குவலயம்வெடிப்ப -- வெஞ்சவில்லமேதார்புறக்கடற்சே
றுமேலெழும்ப - நஞ்சுபாயெயிற்றனந்தனும்நடுங்குறமுழங்கி.
... ... (௬௰)

காலனூர்கையிற்பாசத்திற்கடுங்கொலைப்பயின்ற - சூலவெள்ளி
லைமூன்றிலொன்றறத்தொகுத்தென்ன - வாலநன்முறுக்கிலங்கிடக்
கூற்றெனவயங்க -- வேலும்வெள்ளெயிறிருகடைவாயினுமிலங்க.
... ... (௬௧)

தாள்கணுண்கிலுந்தண்டைகளொலிப்பவிண்டயங்கும் -- வாள
ரிக்கரசாமெனவந்ததைநோக்கிக் -- காளியேறினள்கண்டகர்தென்
புலத்தேறக் - கோளில்வரனவர்பொன்னகரிற்குடியேற (௬௨)

மூரிமத்தளஞ்சல்லரிதுந்துமிமுருடு - பேரிபம்பைபொற்றுடிபட
கம்பெருமுழவம் -- வாரியொத்தனகொம்புகாகளநெடுவளையங் -
கார்முழக்கென்சங்கொடுதிட்டலெனவார்ப்ப. ... (௬௩)



கங்கமாடவெங்கழுகொடுகாகமுமாட — வெங்கடுங்கொலைத்
தானவருயிருணும் விருப்பாற் — றுங்கவன் புயக்காலனுத்துடிப்
பதுபோலச் — செங்கவெங்கொடியெழுவர்தந் தேரினின்றுட,
... ... (௬௪)

சீனர்சோனகர்பப்பரர்சிங்களர்துளுவர் - மானவேற்படையவந்
திகர்கோசலர்வங்க - ரானவன்னகர்நால்விதமனுக்களுமடர்ந்த —
சேனைசரதுரங்கத்தொடுகடலெனச்சென்ற — (௬௫)

ஞான்றரியகிடந்தனளவட்குமுன்னடந்தா — ரானமைந்தர்க
ளெழுவரும்வர்க்குமுன்னடந்தார் - நிறைந்தவாய்ப்பசாசரசர்க்கு
முன்னேடுஞ் - சேனையங்கவர்முன்சென்றுகிருதரைச்செறுத்த.
... ... (௬௬)

செறுத்தவேலையின்மீண்டனர்தேவர்மேற்செல்லுங்- கறுத்தலா
லெயிற்றசுரருங்காளிசேனையின்மே — லுறுத்துமிங்கிவர்தலைகளை
யெனவசுரேசர் — பொறுத்தவில்லிடுகாணொலியுருமெனப்புடைத்
தார். ... ... ... ... (௬௭)

புனையுநாணொலிகேட்டலும்பூதங்களனைத்தும் - வனகயத்தொ
லிகேட்டவாளரியினமென்னச்-சினமிகுத்தனர்கனலெழவிழித்தனர்
சிகர - மனையதோள்புடைத்தார்த்தனரண்டங்கணடுங்க (௬௮)

தடித்தபேரொலிகேட்டலுமசுரர்தந்தலைகள் - வெடித்தழுதண்
டம்வெடித்தனகவசங்கள்விடுதேர் - முடித்தசும்புகள்வெடித்தன
முதுகருங்கொல்ல - ரடித்தகால்பொரூத்துருத்தியின்வெடித்தன
வகடு ... ... ... ... (௬௯)

வேறு.

வெட்டுஞ்சுடர்நெடுவாள்முனைவேல்கப்பணநாஞ்சில் - கட்டுங்
குறைதவரிவிற்கணைகதைவச்சிரம்வளையங் — கிட்டும்பொழுதெறிங்
தார்பொருகிளர்தானவர்திசைக — ளெட்டுங்கடலேழுஞ்சினத்
தெறிபல்படைநிறைய ... ... ... (௭௰)

வில்லுந்தினகணையின்கணம்வெயில்மாய்த்திடவணியின் — கல்
லுந்தினவொளியாலிருள்காந்தேகிடப்பொருவார் — மல்லுந்திய

திணிதோளிரைவாளேறுகள்பட்கார் - செல்லுந்தியமரமாமெ
னத்திசையெங்கணுமிரிந்த ... ... ... (௭௧)

தடியிற்புடைபடலாலெறிதழல்விட்டகல்லுறலா — விடிபட்டு
திர்மருடத்தொகையிடிபட்டுதிர்மலைபோல் — படிபட்டபல்கலை
யால்கனமார்பக்துளைபாய - பொடிப்பட்டபொன்கில்வீசிப்பொன்
னுலகேயெனப்பொலிய ... ... ... (௭௨)

சுரும்பார்முடிநெடுந்தானவர்சுடரும்புயமிறுகப் - பெரும்பாச
மிட்டிறுக்கத்தழல்பிறக்கும்விழிதெறிக்கப் — பரந்தோடியகுருதிப்
புனல்பாயப்படராலைக்- கரும்பாமெனத்தறிப்புண்டனகருங்காளி
தன்கணங்கள் ... ... ... (௭௩)

விற்றோமரநெடுவாளயில்விசிகந்திறல்வசிகள் - கற்றுன்மழுமுத
லாயினகருங்காளிதன்கணங்க - ளொற்கால்பலவரைமேல்வருமெ
ழுகார்சொரிமழைபோல் - மற்போர்பயில்நெடுந்தானவர்மார்பங்
களினழுந்த ... ... ... (௭௪)

கையற்றனகொலையானைகள்கதியற்றனபரிகள் — மெய்யற்றனர்
பொருதானவர்விடுதேர்முடியறவே — வெய்விற்றொடுநாணற்றன
வெறிபல்படையறவே - மையற்படுநெடுந்தானவர்மனவெங்கதமற
வே ... ... ... ... (௭௫)

சிந்துங்கணைபடலாற்பொருசில்தானவர்தலைகள் - பந்துந்தின
வெனலாய்நெடும்படிமீதினிற்புரண்ட - முந்துங்கதைபிடரிற்பட
முகந்திற்கருவிழிக — ளந்நங்கெடத்தெறிக்கின்றனகழங்காமெ
னவமரில் ... ... ... ... (௭௬)

கரிக்கொம்புகள்பிடுங்கித்தடங்கையால்விசைத்தெறிந்தே - மு
ரிக்குந்தடமகுடங்களைமுதிர்மூளையைச்சிதறும் - விரிக்கும்பிடர்பி
டித்துக்கருவிழிகைக்கொடுபிடுங்கிப் - பரிக்கும்பரிதனையும்பலபங்
கிட்டுணும்பேய்கள். ... ... ... (௭௭)

கைச்சத்திரம்போர்மேவியகடுஞ்சூலிதன்கணங்கள் - மொச்சச்
சமரெதிர்தானவர்முடிவன்றலைதன்னுரி - புச்சித்தலைநெடுவாளொடு



முகிரைக்கொடுகுடையாப் - பச்சைப்பசுந்தெங்கம்பழமெனமூளை
யைப்பருகும். ... ... ... (௭௮)

திடவெஞ்சமர்பயில்கேடகஞ்செங்நீரிடைமிதக்கக் — கொடு
வெங்களப்பரப்பிற்குறட்கூளிக்கணமேறிச் - சுடர்தங்கியகெடுவா
ள்கொடுதுடுப்பிற்றுளைத்தொடி - நடவுந்திரைநதிமேல்விடுநாவா
யெனத்திரியும் ... ... ... (௭௯)

பத்துத்தலையாருகைக்கொடுபறிக்குங்கரமுறிக்கும் - குத்துப்
படுநெடும்புண்களின்குருதிப்புனல்குடிக்கு - முத்துப்பொலிசிறு
பற்களைமுறிக்குஞ்சினவெம்போர் - பித்துக்கொடுதிரிகின்றனபெ
ரும்பேய்களின்றொகுதி. ... ... ... (௮௦)

வஞ்சக்கொலைமறவோர்களைவடிவாள்கொடுபிளக்கும் - புஞ்சக்
கருங்குடர்மாலைகள்புனையுஞ்சினவிழியா - லஞ்சுற்றழவிழிக்கும்
பழுவடுக்கென்புகள்கடிக்கும் — நெஞ்சத்திடையுதைக்கும்படை
நிறைமண்ணிடைப்புதைக்கும். ... ... (௮௧)

கடிக்குந்தலைகளைவாலுகிர்க்கரந்தாற்கழுத்தறவே — பிடிக்குந்
தடங்கால்மேலெழப்பிடித்துத்தடவரையோ - டடிக்குந்திசைவெ
டிக்கும்படியார்க்குஞ்சினநிருதர் - படிக்குஞ்சுடர்ப்படையோடறப்
படிமீதுவிட்டரைக்கும். ... ... ... (௮௨)

நிருதப்படைசமருக்கினிகில்லாதெனவுணர்ந்தா - ரொருதிக்கி
னினிருதக்கடலுதிக்குங்கதிரனையான் - பருதிப்படையெடுத்தான்
கதிப்பரியாயிரம்பிணிக்கும் - விரைவிற்செலுமொருதேரினில்வி
றல்வச்சிரப்புயத்தான் ... ... ... (௮௩)

சங்கத்தொனிதருபேரிகைசகடம்தருமுரச - மங்கந்தரவின்று
றொலியண்டங்கணடுங்க - வெங்கெங்கணுமிடியேறுடனிகலும்
படியதிரப் - பொங்கும்படியடிமேலிடுபொடிவானுலகடைய (௮௪)

எட்டுத்திசைமதக்கரியினிந்தாங்குவதரிதால் - வட்டக்கடல்பு
டைசூழ்நிலமெனவானவர்மயங்கக் - கட்டுப்பொலிநெட்டைச்சுட

214 083

ர்மருப்பானைகள்கடல்போன் — மட்டுச்சொலவரிதாயபவய்மா
புடனடக்க ... ... ... ... (அரு)

வந்தான்வயங்கிருதர்க்கிறைவருகார்வரைபுருவான் - கொந்தார்
சடைமுடியான்றுலையாயசெயறு — னெந்தாருவலிதன்றார்முனி
வரர்வானவரெவருஞ் - சிந்தாகுலம்படைத்தார்திசைகெட்டோடி
னகணங்கள். ... ... ... (அசு)

அஞ்சுந்திறந்தவிர்வீரெனவங்கைத்தலங்கவிந்தான் - மஞ்சொன்
றியவடமேருவின்வருசுந்தரப்புயத்தா — னஞ்சங்கொளுமுயிரா
மெனவடுக்கத்தொடுகின்ற - கஞ்சன்றெழுதாட்டாமரைக்கருங்
காளிதன்கணங்கள். ... .... ... (அஎ)

புகுந்தான்றலைப்பயந்தாளிணைமுனிதாளிணைபுகழ்ந்தான் - செ
கந்தான்மதிக்குறுவச்சிரப்புயத்தான்னெதிர்செறுந்தா-வகந்தாழ்வு
றுகடலாமெனவொலித்தாரிருவரும்வா - ளிரக்தேவளர்சிலைதுன்
னெனவருத்தார்சமர்தொடுத்தார். ... ... (அஅ)

இருகார்வரைமுடிமேல்விடுமழைமாரியிலெய்தார் - சரதாரைக
ளுடல் புண்படத்தாழுங்கொழுங்குருதிப் — பெருமால்வரையரு
வித்திரன்திசைபோவதுபோலச் - செருமேவிபகளமெங்கணுந்தி
சையெங்கணும்பெருக. ... ... ... (அகூ)

சினவாளியொடுவாளிசினவும்செயலெனவும் - வனமால்வரை
யொடுமால்வரைமருவுஞ்சமரெனவும் - புன்யானையினொடியானை
யும்பொரும்போரெனவுங்கா — ரனையாரிருவரும்வாளமர்களரிடை
டைபொருவார். ... ... ... (கூ0)

ஆரம்பொருதொடைகொண்டனன்கன்மாகடல்பருகுந் - சீறுங்
கனல்முன்சிந்துவதிரள்வெம்புகைசொரிய — நாறுந்தொடைமுடி
வானவர்நடுங்கிச்செயலொடுங்கி — மாறும்படிவித்யாதரன்மக
னெற்றியிலெய்தான். ... ... ... (கூக)

எய்யுங்கணைநுதலிற்படவெமையாளுமைசிறுவன் — செய்யுஞ்செ
யல்மறந்தானொருசிறியன்கொடுவினைபால் - மெய்யொன்றியவுயிர்



போயுடல்விழும்போதினின்மருந்தா - லய்யுந்தனியொருவன்னெ
னவுடனேசெயலுணர்ந்தான். ... ... (கூ௨)

கோதண்டமெடுத்தான்விசிகுதைநாணொலியிட்டான் - வேதண்
டம்நடுங்கும்படிவிர்தோள்புடைத்தார்த்தான் - தீதண்டியகிருதன்
றலைசிதறும்படிவினைவா — னுதண்டுவதாரென்றிடவாவக்கணைஎடு
த்தான். ... ... ... ... (கூ௩)

கந்தங்கொளுமலர்நாய்மறைகருதுந்தனியிருடிச் - சந்தங்களிய
ம்பிச்சமர்த்தருவிற்றெரட்டகொண்டான் - உந்துங்கொலைகிருதன்ற
னதுயிர்மேலசையுடையான் - வந்தஞ்சினனின்றுணரவடல்வாளி
யைவிடுத்தான். ... ... ... (கூ௪)

உரகங்களினரசன்வடவுபர்மேருவைமுன்னாள் - வரிகின்றதோர்
திறமாமெனமார்பிற்றளிபாயா - விரிகண்களினனல்சிந்திடவுடனே
க்கிடவிசித்த — புரிவெஞ்சமருடைவச்சிரப்புயத்தானிணைவயர்த்
தான். ... ... ... ... (கூ௫)

பின்னேதலைபறவேஉயர்பிறைவாளியைவிடுத்தான் — பொன்
னேர்முடிபொடியாயுகநெடுவன்றலைபறுந்தான் - சென்னீரிடைமிக
ந்தேவருந்தேரீன்றுவெங்களத்தே — மின்னேறிடிபடுமால்வரை
விழுந்தாலென விழுந்தான். ... ... (கூ௬)

வயிரப்புயகிருதன்றலைமண்மேலுறவிழலுஞ் - செயிரற்றனர்சில
தானவர்சிலர்கைகுவித்தழுதார் - மயிரைத்தலைகிராவிளமட்டவா
ரெனவழுதார் - குனிந்ர்க்கொடுசிலரோடினர்சிலர்வன்பிணத்தொ
ளித்தார். ... ... ... ... (கூ௭)

வேறு.

பண்டாரணத்தினுட்பொருளாம்பாலைக்கிழத்திபெற்றெடுத்த -
வண்டார்தொடைச்சுந்தரப்புயத்தான் வலியும்பாசப்பிணிக்கொலை
யாற் - றண்டாவரற்றம்பிபடுந்தாழ்வுகிருதருடைந்ததுவும் - கண்
டான்றுமகேதுவென்பான் கடைக்காலெழுந்த கனலனையான்.
... ... (கூ௮)

கூற்றுறழ்வெங்கவட மேருக்குவடுறு க்கவிடக்கையின் - மாற்றுஞ்
சிலைபிறைசென றிந்தமகராலயத்தின் விடவடிவார்த் --- தோற்றும்வி
ழியிற்புகைபிறக்கத்துஞாவாளெயிறுவெயில்விரிப்பக் - காற்றின்
விசையாக்கடுநேரைக்கடவிச்சமரக்களத்தூற்றுன். ... (௯௯)

நிருதரெதிர்ந்தார்குணத்தரசர் நின்றுரெதிர்ந்தார்பெரும்பேய்
கள் - பருநிநிருதர்வாட்படையைப்பறித்துவலாரபேரனுடறுணி
க்குங் - குருதிகுடிக்குய்வயிரிடந்துகுடராற்புயத்தைப்பிணித்திருக்
கும் --- பொருசெக்கழலின்விழிபிதுங்கப்புடைக்குஞ்செவிடுநெரி
வுபட. ... ... ... ... (௱)

வாளாற்றடிவர்விழுந்தசிரமகராலயத்திற்புகலெறிவர் - தோளா
ற்றழுவிக்கொலைபயில்வர் துண்ணென் றெலிக்குங்கழல்புனையுந் --
தாளான்மிதிப்பருடலொரியக்குதிப்பர்ததியிற்சூழ்மத்தின் - மீளா
வதைசெய்கெடுந்தண்டா லுழக்கிவதைப்பர்விறலசுரர். (௱௧)

கொடுக்குமாழிநெரியநெடுங்கொடுந்தேர்ப்பாகர்கொடிமுறிய -
மிடுக்குநிறைந்தகெடுந்தேரின்விரைவிற்பாய்ந்துவயநிருதர் - நடுக்
குழுசலம்பறித்தடித்துத்தாமமெள்விகலர்ந்துமதங் - குடிக்குங்கரி
யின்றேல்புனைந்துதுடிபாணிரட்டும்பலகணங்கள் ... (௱௨)

தலையிற்புடைப்பர்தலைநெரியத்தாளிற்புடைப்பர்தாடுக்கி - மலை
யிற்புடைப்பர்மலையனையமகுடம்பலகோடிகள்பிடுங்கி - யலையிட்
டெறிவரலையாழியனையகுருதிப்பெருக்கத்திற் --- கொலையிற்றங்
குங்கருங்கூளிகோடியமிழவமிழ்த்திடுவார். ... (௱௩)

ஆனைத்தலையிற்பரித்தலையிலடங்காநிருதர்கருந்தலையிற் - சேனை
த்தலைவர்சிரத்திலவர்கரத்திலெடுக்கும்பலபடையில் - வானைக்கட
க்குந்தேர்க்கொடிஞ்சில்வனையுங்குடையில்வெண்கொடியில் - மீன
க்கடலில்வானகத்தில்விரைவிற்றுவுவிறற்கணங்கள். (௱௪)

பெரும்பேய்க்கணத்தின்வலிபொருவர்பேசுந்திறனன்றெனவியந்
து - சுரும்பார்வாகைநெடுமுடியான் றர்மகேதுகனல்கொழிக்கும்
- பொருப்போர்க்கணைகளைப்பலவாய்ப்பொழிந்தாற்புயல்போற்



பேய்க்கணங்கள் - திரும்பாதோடிப்புகுந்தனவிச்செகங்கோகடல்
போயொதுங்குதல்போல். ... ... ... (௱௫)

பார்த்தான்விறற்சுந்தரவாகுபருத்தவண்டம்வெடிபடவின் - ஞர்
த்தானார்த்தான்முன்னடந்தானசுரர்க்கரசன்கணைமாரி --- தூர்த்
தான்றார்த்தகணையனைத்துந்தொடுவெங்கடுங்காலெதிர்ப்பட்ட -
கார்த்தாரையைப்போல்விலக்கினான் கலங்காவித்தியாதரன்மைந்
தன். ... ... ... ... (௱௬)

பின்னேன்றனிக்குஞ்செயனேக்கிப்பெரும்பேய்க்கணமஞ்ஞூறு
வெள்ள - முன்னோடப்பப்பின்னடந்துமுனைவெங்களத்தின்முன்
னின்றான் - றன்னேரில்லாவிஞ்சைமுனிதவத்தாற்பயந்தோன்வட
மேருக் - கன்னேர்புயத்தான்காமனெப்பான்கன் னென்பான்கவ
லையுடன். ... ... ... ... (௱௭)

கனகனுடன்வந்தெழுஞ்சேனைக்கணங்கணிருதக்கருங்கடலைப் -
பனகமுடியிலுலகழிக்கும்வடவைக்கடலைப்பருகுதல்போல் - சின்
வுங்கொலையார்செகுத்தனரால்செருக்குஞ்செயலையுறநோக்கி - வினை
வின்முனைந்தானவ்வசுரனெடுவெங்கணைகள்பலதெறித்தான்.
... ... (௱௮)

தெரிந்தகணையினுதிபாய்ந்துசெல்விற்றழியும்பலகணத்தைச் ---
சொரிந்தகணையின்கொலையெம்மாற்சொல்லற்கரிதேயகல்வானங்
-- கரிந்தமுதுவானெழுங்கணையாற்கருதுங்குலவெற்பெரிந்ததிசை --
விரிந்தகணையாற்பூலகம்வெந்தவழிவிழுங்கணையால். (௱௯)

செல்லுங்கணையாற்குறட்கூளிசிலசெவ்வானத்திடைசென்ற ---
வல்லுண்டனையகடலேழுமடங்கச்சிலசென்றாழ்ந்தனவாற் - பல்
லுந்தலையுமறநிலத்திற்படிந்தசிலபாதாளத்தி - னெல்லையேழுநிறைந்
தசிலவெம்மாற்சொல்லமிகவரிதால். ... ... (௱௰)

ஒற்றைக்கணைபோயானையுருமுருவிப்பரியினூரமுறுவிந் - பொற்
புத்தடந்தேர்பலவுருவிப்புணரியளவைக்கணத்தரசர் - செற்றுங்
கிரீடமிகவுருவித்திக்கிற்சிகரமுருவிநெற்றி - ஒற்றைவிழியானுலக
முதலுலகமேழுமுருவியதால். ... ... (௱௰௧)

வெடிக்குங்கனல்வெங்கணைமாயவிரைவிற்றுன்வியிடைபாய்ந்து — பிடிக்கும்பிடித்துக்கனல்பிறக்கப்பிசைந்துபுகைவிட்டெழுந்து — பிடிக்கும்பகுவாய்ப்புகும்வாளிபெண்ணில்கோடிகறுமுறெனக் — கடிக்குங்கணத்தைவிலக்கிவந்தான் கனகசுரன்கழறுவனால்.

... ... (௱௰௨)

கனகனென்னும்பெயரியைக்கரியுட்படுத்தக்கனலுருக்குங் — கனகமெனநின்னுடன்முழுதுங்கனல்வெங்கணையாற் கரைப்பனெ ன — கனகனுக்குபொற்றேருடையவசுரன்சமரிலொருக்குகென்ன — கனகன்முன்னறிவையுரைத்தான்கனகனதன்பின்பறைகுவனால்.

... ... (௱௰௩)

தாமனெனும்பேர்கினக்கிசையச்சுடுவெங்களத்திலின்னுயிரெல்லாம் — தாமமெழுகின்கின்முழுதுஞ்சுடுவனெடுவிற்சாடுமொற்றைத் — தாமனொடுவாளியினென்றுன்சொன்னாப்புலவரோடுபொருந் — தாமன் யானேயொருபொழுது முன்னேடமர்க்குத் துணியேனல்.

... ... (௱௰௪)

என்னுமுன்னமேழிரண்டுவாளி தொடுத்தெய்தானிருந்தன் — மின்னார்கனகன்வ்வாளிதொடுத்துவிரைவினறுத்தனனற் — பொன் னார்வடிம்பினெடுவாளியிரட்டித்தொடுத்தான்புகழ்கிருதன் — றன் னேரில்லானுடன் வாளிதொடுத்தான் றடுத்தான்சகம்புகழ.

... ... (௱௰௫)

வேகவிடவாளரியெழுதுங்கொடியைத்தடிந்தான்விறலசுரன் — மாகமணக்கும்புகைத்துவசமறுத்தான்கனகன்வல்லசுரன் — றேகந் துளங்கப்பொன்னுருவன்றேரின்பாகன்றலையறுத்தான் — சோக கிருதன்றேர்ப்பாகன் றலையைத்துணித்தான் சொல்வரினால்.

... ... (௱௰௬)

சிறியானிவன்றன்னொடுபல்போர்செய்யிற்செருவிலெனக்குடைந் து — வறிதேவிருந்தமந்தாரமாலைமுடிவானவர்நகைப்பார் — பிறிதே திவன்றனுடற்குருதிபெருமண்மகளுக்கூட்டுவனென் — றேறிவான் கதிர்வெம்பருதியெனும்பருதியெடுத்தானிகலசுரன். (௱௰௭)



செருமாலைக்கர்கருந்தலையைத்திருகிக்குருதிப்பருகியது — கரு மாலுருமுக்கருகவெயில்கான்றதலையார்கடவுடெ — ஞெருகான் மிசைநின்றுயிரயாண்டுருற்றுந்நவத்தின்செயமேருக்கிப் — பொரு மான்மழுவைவலனேந்தும்புனிதனளிக்கப்பெற்றுளது. (௱௰௮)

எடுக்குங்காலேயோருருவாயீரேழுலகுநிலைகலங்க — விடுக்கும் போதுபலவாகவிண்ணிலெழுந்தவெண்ணிலவாய் — நடுக்கம்படை த்துப்புவியனைத்தும்நலியவிடுந்தான்கனல்கொழித்துக் — கடுக்கொ ண்டுருத்துப்புகைவிரித்துக்கனகன்முன்புகுறுகியதால். (௱௰௯)

கண்டான் விஞ்சையன்புதல்வன்கண்மூன்றுடையோன்றகருரு வோன் — பண்டார்வென்விதனையழிப்பானெடுத்ததிடப்பாகத்து இத்தான் — கொண்டாளன்றேன்கொடுப்பவல்லன்கொடுப்பவிவன் கொண்டதுவயிரத் — தண்டாலகலாவகையாழித்தழலிற்கொளுத் திப்பிடித்தனனால். ... ... ... (௱௨௰)

மேயாரேயிலவரைக்கப்பால்விரியுமிருள்போயகலவிலங் — காயும லைவங்குளியன்னகதிர்முன்னெழுமின்மினிபோல — மேயவெயிற் றெழச்சுழற்றிவிடுத்தானத்துவரைநடுவட் — பாயுங்கதிர்போற்றி ரும்பியவன்பருமமார்பில்பாய்ந்தனவால். ... (௱௨௰௧)

பாயாமுன்னமெய்பாயப்பாயுங்கனல்போற்சினந்துமனந் — தூயா ன்மேனிவிதிர் விதிர்ப்பச்சுடர் வெங்கதையாற்புடைத்தனனால் — மீயானுலகுமதிர்ந்தனவிண்வெடித்தவாறேரெமைக்காக்குந் — தா யாமனையாள்சிறுவனுயிர்தரியானென்னவெருவினரால் (௱௨௰௨)

கனத்தின்மயங்கியுணர்ந்துநின்றகனகன்வயிரக்கதையோச்சி — யினக்குந்தேரின்முடிநெரியமகுடநெரியவிகலசுரன் — மணக்கும் வாகைச்சிரநெரியவுடலம்நெரியமண்ணெரிய — மணக்குஞ்சேடன் படநெரியவடிந்தான்மறலியுயிர்கொள்ள. ... (௱௨௰௩)

மேருவரைபோல்வருகனகன்வெகுளிகிருதன்மேற்செல்லத் — தேருமுடனும்பாதாளஞ்சேர்ந்தவிசையம்புகழிரண்டு — மருமறி

யமுனிபுதல்வனருகுசேர்ந்தவுயிர்மறலி - சேருமுலகிற்சேர்ந்ததொ
ஞ்சேர்ந்ததெவனென்றறியேமால். ... ... (௱௨௪)

பெருவெங்களத்திலுயிர் கொண்டுநின்றார் பிடித்தபடை யெறிந்
தா - வெருவுந்திறலார்கால்விசைத்தார்விசிக்குங் கழற்றாருகன்முன்
னம் - பொருதன்றுணைவர்மடிந்தமைபோய்ப்புகன்றானசுரன்பொ
ய்யென்றான் - கருதும்போரிலொருபுடையேகண்டோமென்றார்க
லங்கினரால். ... ... ... (௱௨௫)

சிற்றமானமிரண்டுமொன்றாய்ச்செறிந்ததிறத்தால்வல்லசுரன் -
வேற்றுநிருதன்போன்றிருந்தான் விண்ணோர் செயலால்விரிந்ததன்
றி - மாற்றும்பகைவர்மூன்றுளரோ ரொருசன்மகனேடிளிதாகிறகப் -
போற்றுந்தேவர் தமைமுந்திப்பொடிப்பேனென்னவிரைந்தனனால்.
... ... (௱௨௬)

விண்ணோர்மேன்முன்சென்றதனால்விளைந்தசெயலாமிதாமறியி -
னெண்ணுறினுஞ்செலகிலேன்ராவெற்றியேயுற்றார் வலிகெடத்தார் —
நண்ணாரன்னோர்வலிகெடநானரமளிப்பான்யாங்களுளம் — அன்
றுவென்றான்பானுவேகனசுரன்மனந்தணிந்தனனால். (௱௨௭)

அறைந்தாள்பானுவேகனென்பானசனிவேகன் றீக்கண்ணன் —
பரிந்தார் துணைவர்புறங்காப்பப்பவனவேகத்தேருந்தி - யெரிந்தார்
படைக்கையநிருதரேழாயிரவெள்ளங்காப்ப - நெரிந்தான்சேட
னுடல்படமுநெளிந்தானசுரர்நெருக்கத்தால். ... (௱௨௮)

மூன்றுஞ்சேனைநெடுந்தூளிமுதுவானகத்தைமறைத்தவிழ - சிந்
துங்கடுந்தீச்சமர்க்கென்றுசெல்லுங்கணத்தின்முகம்பாய்ந்த - நந்
தந்தனுவின்றொலியுந்தடந்தேர்ப்புடைப்புமெழுந்தவட - விந்த
நடுங்கத்திசையானைவெருவிவிசிக்குந்தறிபிடுங்க. ... (௱௨௯)

மூவரெழுந்தார்சமர்க்கென்றுமுன்னாள்முந்நாட்டந்தனிடத் —
தேவிசெயல்யாதெனவறியேஞ்சிறுவரெமூவர்வலியரென்ப - தோ
விலுலகமறியுமெமக்குடையவினையாற்றலெவ்வளவோ - வாவதறி
யேம்பொரெளியதன்றெனவானவரயிர்த்தார். ... (௱௩௰)



மூவரு .னேவேகத்தான்முன்னேநடக்குந்தானவர்கள் - காவ
லுலகம்புடைசூழக்கடும்போர்க்களத்தில்வந்தெதிர்த்தார் - தாவி
ல்பெரும்பேய்க்கணம்வந்துசார்ந்தகவ்றபலட்யெதிர்தா - ரோவில்
சமரமூண்டதுவாலோங்கற்குலங்களெதிர்த்தனபோல். (௱௩௧)

குதைவெங்கணையினெடுந்தூணிதுணியக்கொடுங்கணையின்றித்
- தகையும்புயத்தார் தானவர்கள்சாடுங்காலைத்தம்மார்பிற் - புதை
யுங்கணைகைக்கொடுபிடுங்கிப்புனைகார்முகத்திற்றொடுத்தெய்ய —
வதையுண்டனர் தானவர்க்கரசர்சான்றோரிருவர்மனங்களிப்ப.
... ... (௱௩௨)

சென்னீர்ப்பெருக்கின்மிதந்தோடுஞ்சிகரமனையதலைவாரி - பின்
னோர்நெடுவெற்படைநிருதர்விரியுமுகத்தில்விசைத்தெறியும் - பொ
ன்றாய்புநறியர்றார்புழைவாய்த்தமதுபன்முறித்துக் - கன்னோர்
மணிக்கைகரம்பிசைத்துக்கடும்போர்கடக்குங்கணம்பலவால்.
... ... (௱௩௩)

வெய்யவாளிதலையறுப்பவிசைத்தாழாமல்வெஞ்சினத்தாற் - கை
யினெடுத்தபலபடையாற்கடும்போர்கடக்குஞ்சிலகவந்தஞ் - செய்
யகுருதியேலெழும்பச்செங்கட்பசாசின்கைகோத்துத் - தொய்யற்
படுவெங்களப்பரப்பில்சுழலுங்கவந்தமளப்பிலவால். (௱௩௪)

காலற்றார்பொற்பனையனையகரங்களற்றார்கழுத்தற்றா - ராலத்
திரளையனையவிழியற்றாரற்றார்துளைநாசி -- வாலப்பிறைவாளெயி
றற்றார்மலையுஞ்சமரில்மனமற்றார் - நீலக்கடல்போன்முழக்கற்றார்
நிருதரெதிர்ந்தார்கணக்கற்றார். ... ... (௱௩௫)

வேறு.

எம்பிமார்தவித்தனரெனக்கமலனுமெழுந்தான் - றம்பிசுந்தரன்
றிசைனென்றிருவர்தற்சூழக் - கம்பமால்கரியூற்றத்தபேய்க்கணங்
காப்ப - வெம்புபோர்க்களம்புகுந்தனன்விண்ணவர்வியப்ப.
... ... (௱௩௬)

முன்புபோர்புரியிருவருமொருபுடைமுண்டார் .— வன்பினல்
வருமூவருமொருபுடைவளைந்தா - ரன்பிலாவலிமசுயரர்கண்

வருமடைந்தார் - தென்புலக்கிழவனுமடைந்தொருபுடைசேர்ந்
தான். ... ... ... ... (௱௩௭)

தானைவேந்தருக்களவையான்சாற்றுதலரிதால் - வானமீனெண்
ணிலெண்ணலாமுடன்வந்தவாசி - யானைதேருருவரெண்ணிலெ
ண்ணலாம்யானை - போனவேலையின்மணலெண்ணிலெண்ணலாம்
பொருதேர் ... ... ... (௱௩௮)

அலைதவிர்த்தொளிகரங்களைத்தறித்தனரகன்ற - வலைதெறித்தெ
ழுங்களைவெளக்கனைக்கனையுருத்தார் — மலைவிரிக்கும்வெஞ்சிறை
யறமன்விழுந்தென்னத் - தலைதறித்தனர்தானவர்பேய்க்களஞ்
சாய. ... ... ... ... (௱௩௯)

எரியெழுந்தசெங்கண்களிற்புகைப்பிழம்பெழுந்து - சொரியவெ
ன்ளெயிறுக்குமுயிர்தழுடையசுரர் - பரியவன்றலையிடத்துக்கொண்
டுலகெலாம்பரக்கும் — விரிகடுங்கணைதலைபடுத்தாமெனவிளங்
கும். ... ... ... ... (௱௪௰)

புழைக்கையானையின்வயிற்றிலுனரிக்குலம்புகுந்து - நுழைக்கு
மிருளைக்கவ்வுறக்கழுத்திணிற்றனிந்த — விழைக்குநூலெனுங்குங்
குடலுப்புறதிகவி - யுழைக்கும்வல்லியிற்பிணிப்புண்டதாமென
வுழலும். ... ... ... ... (௱௪௧)

செம்பொனற்புனைதேர்களின்முடியிடைச்சேர்ந்த - பம்புவெ
ண்கொடிக்கழைவழிமேறிமெய்பதரு - அம்பர்னோக்கூறவொல்றி
னின்றென்றுறத்தாவிக் - கம்பமேறியகழையாரிறுடுவகணங்கள்.
... ... (௱௪௨)

பேயெடுத்தெறிகற்களைத்தானவர்பிடித்துச் - சாய்வில்லாதவர்
மேற்செலவெறிகுவர்சாடும் - காயும்வெங்கணையாற்பொடிபடுத்
திடுதற்க — ளோயுநாள்விழுங்கன்மழையாமெனவுதிரும். (௱௪௩)

ஈன்றுவெஞ்சமரியற்றியகாலையினிருதன் - வாங்குவில்லினைக்கி
ளியக்கணும்வந்தா — னேருங்குபோர்க்கெனக்குறித்தறைகூறின
னடனே - நிங்கிலாவலித்திலகனுஞ்சினந்தெதிர்செழுத்தான்.
... ... (௱௪௪)



வெய்யகூர்ங்கணையையிரண்டாயிரம்விடுத்தா - னையின்பேணி
யையகன்றபுண்ணுக்கினனசுரன் - வையமர்ந்துடைசான்றவர்க்கர
சனும்மலர்ந்த — செய்யபூச்சொரிமுருக்குயர்வரையெனச்சிறந்
தான்! ... ... ... ... (௱௪௫)

திலகன்விஞ்சைமாமுனிபெறுஞ்சிறுவன்வல்லசுரர் — கலகன்
வெங்கதத்தைம்பதுகடுங்கணைதொடுத்தா — னிலகுசெஞ்சடை
முக்கணன்மழுப்படைபேறும் - விலகும்வச்சிரக்கவசத்தையறுத்
தனன்விரைவில். ... ... ... (௱௪௬)

கவசமற்றனும்வெஞ்சினங்கொண்டனன்கடுந்தீத் - தவசனங்க
வன்கவசத்திற்கணைபலதொடுத்தா - னவசமுற்றனர்வானவராறத்
தின்முன்னடக்குந் - திவசநீட்டியவினையெனக்கணையெலாந்தெறித்
தான். ... ... ... ... (௱௪௭)

வாளிரைக்கொருதொடைகொண்டுவிடுத்தனன்வலங்கொள் —
காளிதன்மகன்றனவன்மகுடத்தைக்கடுகின் - றூளியாக்கினன்
விண்ணவர்மலர்மழைசொரிந்தார் - நீளவான்குவடிழந்தகார்வரை
யெனநின்றான். ... ... ... (௱௪௮)

ஈசனீந்ததுவானவர்முதலெலாமீர்ந்த - தாசைப்த்துளதெவ்வர்
தந்நெஞ்சினிலமர்ந்த - தோசையொண்கடல்பருகும்வெந்தீச்சொ
ரிகணிச்சி - வீசிவிட்டனனிருதனுமீசனும்வெருவ. (௱௪௯)

அண்டமெங்கணுந்தன்னுருவாகியதலர்ந்த — புண்டரீகனும்
வெருக்கொளப்புகுந்ததைநோக்கித் - தண்டுவெஞ்சமர்த்திலக
னெனும்பவன்சதகோடி — கண்டமாக்கினன்கண்டகத்தானவன்
காண. ... ... ... ... (௱௫௰)

இறைவிகாதலன்றேரினையெழுநூற்றம்பாற் - குறைபடுத்தினனங்
கியம்படையவைகொண்டு - நிறைசெழுங்கதிர்ப்பருதியின்வெயில்
கொண்டுநீண்ட - கறைகொள்வாளியையறுத்தனனங்கியாங்கண்
ணன். ... ... ... ... (௱௫௧)

மற்றைவாளியாலிவன் வலிமாய்வதன்றயரில் - சிற்றினத்தவனர னெதிர்க்கிலுஞ்செறுப்ப - னற்றைநாளொருகணத்தினிலுல்முக னெரிக்கு - மொற்றைவாளியாலிவ்னுயிருண்பனென்றுணர்ந்தான். ... ... (௱௫௨)

சரமெடுத்தவன்றந்தைசொல்மந்திரஞ்சாற்றிப் - பரவுபூசனை மாளதனெறிமுறைபகிர்ந்தா - னுரவுநாணிடைத்தொடுத்தனனம ருமுலகு- மரனுமிங்கிது தவறிலையென்றசொல்லுறைந்தார். ... ... (௱௫௩)

வெய்யதாருடேந்தானவருயிரப்பிடித்தா - னுய்யிலர்வுரகக்க ணையத்துணைவுய்த்தான் - வையமேவியநிக்ருளானவர்கணைவருந் தான் - பையவங்கிமுன்பஞ்செனவெரிந்தனபாரில். (௱௫௪)

தலைகொண்டோடியத்தலைதனைக்குரைகடல்வீழ்த்து - மலைகொ ண்டோடியவாயுவானவனெனவானோர் -- நிலைகொண்டோமினி த்தானவர்னிறவர்நால்வர் - கொலைகொண்டார்நமக்கெழுவருண் டாமெனக்குவிர்ந்தார். ... ... . ... (௱௫௫)

வில்லெடுத்தனன்புட்டிலுங்கட்டினன்விரைய - மல்லெடுத்துய ர்மார்பினிற்கவசமும்வனைந்தா - னில்லெடாவெனத்திலகனைநெரு க்கினனீண்ட - வல்லடுத்துயர்மேனியனசனிவேகத்தன். (௱௫௬)

நடிக்கும்வாம்பரித்தேரினைநடாத்தினன்வந்தா - னடிக்கும்வெங் குரற்சுந்தரனிடக்கையிலேந்திப் - பிடிக்கும்வில்லின்வலக்கை யிற்பிடித்தவெங்கணையின் - முடிக்கும்போர்க்கெனத்தம்பியைக் கூவினன்முன்னர் ... ... ... (௱௫௭)

சிறியனின்றனையொடுபெருந்திறத்தினர்செயல்கேட் - டறிவி ழந்தனனென்றனையெனமனத்தடைபோல் - மறியுயர்த்தவன்மால யன்மூவரும்வரினுங் - குறிகொள்வெஞ்சமர்க்கஞ்சிலனியொரு கோளோ. ... ... ... (௱௫௮)

செருக்களத்திலின்றுன்றெறுசிறிதுபோர்செய்யும் - விருப்பவ தால்வந்தேனென்றனன்சான்றவர்வேந்த - னெருப்பினன்னவனி



னக்கிவனியாரொடுமியு — முருப்பவெங்கணையொன்றினுக்கிணர் யெனவுரைத்தான். ... . ... ... (௱௫௯)

உரைத்தவாசகம்பின்பெனமுன்னெனிமெய்தான் - றிரைத்தலம் புகழ்சுந்தரன்றீக்கணைகோடி — யிரைத்துமால்வரைப்புனத்து வீழ்குரீஇயினமென்ன - வரைத்தசாந்தணிதானவன்மார்பினில டங்க. ... ... ... ... (௱௬௰)

புகையெழுந்தனநாசியிற்பேசும்வாய்ப்புழையிற் - சிகையெழுந் தனவெழுந்தனகண்களிற்சினந்தான் - மிகையெழுந்தவல்லசுரன் வெங்கணைபலவிடுத்தா - னகைமுகத்தினன்சுந்தரனறுத்தனன வியா. ... ... ... ... (௱௬௧)

விற்றெழிற்கிவன்சலிப்புறுவ்விரியுநாள்வரினு - மற்றெழிற் சமராவிவனுயிரைமாய்க்குவனென் - றெற்றைவாளிபொற்றை மேற்பாய்ந்தெனவுடன்று - குற்றமற்றவன்தேரினுள்நிருதனுங்கு தித்தான். ... ... ... (௱௬௨)

குதித்தவன்றனையுதைத்தனனுதையுண்டகொடியோன் - மிதித்த னன்புகழ்ச்சான்றவன்றனைமிதியுண்டோ - னதிர்த்தகைத்தலத்த றைந்தனனடியுண்டவசுரன் - கதித்தசுந்தரன்மார்பிடைப்புடைத் தனன்கரத்தால். ... ... ... (௱௬௩)

குத்திருன்றிறற்சுந்தரன்குத்துண்டகொடியோன் - பத்துவான் றிசையொலியெழக்குத்தினன்பாச — சித்தம்வேறுறவைதனனிரு தனுஞ்செம்பொன் - வித்தகத்தனும்வைதனனிருதனைமீண்டு. ... ... (௱௬௪)

கிட்டினாரிருவருமிருதோளினைக்கிடைத்துக் - கட்டினாருடலொ றெனக்கருந்தலைநெறிய - முட்டினார்பிறைமுனையெயிற்றெரியெழக் கடித்தார் - நட்டவெற்பெலாகடுக்குறத்தனித்தனியார்த்தார். ... ... (௱௬௫)

வாளெழுந்தனர்மீனெலாமுதிர்த்தனர்வளைந்த - மீனவேலையிற் பாய்ந்தனர்சேறெழுமிதித்தார் - கானமெங்கணுந்துகைத்தனர்கரு

வரையோடு - மானைசாய்த்தமாமரமெனவடியறவுறைத்தார். ... ... (௬௬௬)

கொள்ளைவான் றிரைநதியெனக்குருதியாறெழுக்க - வெள்ளி டற்கிடமிலாவகையிருவர்தங்கரத்தில் - புள்ளவென்றுசொற்றுடைய நிரத்தநீர்பொருந்த - உள்ளசெக்கர்வான்முகில்பொதிவரையெனு முருவர். ... ... ... ... (௬௬௭)

சேர்ந்தகைப்பிணிநெகிழ்த்தனர்தேர்மிசைச்சென்றார் - கூர்ந்த வெங்கணைவிற்கொடுதொடுத்தெய்துகுறைத்தார் - நேர்ந்தவாழை யின்கனியிடையூசிசென்றன்ன - வார்ந்தவள்ளுகிர்வடிக்கணிறுவைழு ந்தனவாளி. ... ... ... (௬௬௮)

காய்ந்தவங்கிபெங்கடவுளுங்கண்ணிமைகருகத் - தோய்ந்தபே ரொளிவிரிப்பதுசுடரிலைச்சூலம் - வாய்ந்தவெங்கரத்தன்னைமுன் றுட்டவந்த - தேய்ந்தமாயமாக்கணையினைச்சுந்தரனெடுத்தான். ... ... (௬௬௯)

கற்றநங்கையார்குருமுறைகங்கையங்கரையாற் - சொற்றமாய மாமறையனைமுட்கொண்டுதொடுத்தா - லுற்றதன்னுருவுலகெலா மாக்கினனுயர்த்தோன் - மற்றவாளசுரேசனுமன்மயங்கினனால். ... ... (௬௭௰)

மாயமென்பனநிசாசரர்கள்றிமற்றுளவோ - வேயுமாயமிவ்வுல கிலையெனமனத்திகைத்தான் - காயும்வெங்கொலைக்காளிதன்மகனு ருகனித்தின் - றுயும்வேலையில்யாவரேறுவெனச்சமரயர்ந்தான். ... ... (௬௭௧)

அன்னகாலையிலெய்தனன்சான்றவர்க்கரசன் - மன்னும்வாளி யின்மாயையால்வரவுணர்ந்திலனாற் - கன்னலொன்றினிற்சென்றது நிசாசரன்கவித்த - பொன்னின்மெளலியந்தலைகொண்டுவிரைவிற் போயதுவால். ... ... ... (௬௭௨)

வேறு.

பாகனோவுதேரின்மீதுபானுவேகனின்றவ- னாகமானுந்தூணைவர் விண்ணினின்றுமின்றசெயலினான் - மேகராசிகருகலங்கவிழிசொ ரிந்தவெருளியான் - மாகநீச்சிலையினுந்நூம்வாளியேவியந்தனன். ... ... (௬௭௩)



ஏவுகின்றவாளிகாளியேவுகின்றகூளிமேற் — றுவிநெஞ்சிடந் திடத்தருப்புணீர்நெடுந்திரை — வாவுதண்கடற்கணோடவாளி யோடுசெய்கைபோ - லாவிகொண்டுபேய்கள்திக்கினப்புறத்தி றுத்ததால். ... ... ... (௬௭௪)

கண்டுநின்றபதுமுகன்றன்கரமசைத்தழைக்கவுங் - கண்டுநின்ற னுகிடாததன்மைகண்டுகமலனும் - விண்டமுண்டகத்தின்முத்த ரும்புகின்றவெண்ணகை — விண்டராவெனச்சினந்துவிரைவில் வந்தெதிர்த்தனன். ... ... ... (௬௭௫)

சத்திகொண்டதானவன்றடங்கன்மார்பிடிந்திடச் — சத்திரங் கொள்செங்கையானையொத்தகாளிதன்மக - னத்திகொண்டகுடு மிவெற்பையங்கையொன்றிடந்துகொண் - டத்திகொண்டமண் குலுங்கவசுரன்மார்பிலேவினான். ... ... (௬௭௬)

வந்துமாகன்மாலைதங்குமார்பிலேவிழாமுனம் - வந்துமாகவீதி மண்டுமண்டுகட்குநேரெனப் - பந்தின்வாளிபானுவேகனுந்தொ ளைறுங்குகற் - பந்திநின்றதிக்கயத்தின்மத்தகம்பதிந்ததால். ... ... (௬௭௭)

அங்கிவாளிகாளிமைந்தனுயிரந்தொடுத்தன - னங்கிவாளியாயி ரத்தையசுரர்கோனறுத்தனன் - திங்கள்வாயவாளிகாளிசேவகன் றொடுத்தனன் - றிங்கள்வாயவாளியாற்சிதைத்தனன்றயித்தியன். ... ... (௬௭௮)

முக்கணீசன்வாளிவிஞ்சைமுனிமகன்றொடுத்தனன் - முக்கணீ சன்வாளியால்முடித்தனன்றயித்தியன் - மைக்கணுளுயிர்த்தமைந் தன்வருணவாளியேவினான் — மைக்கண்மார்பனிருதனந்தவாளி யால்மறுத்தனன். ... ... ... (௬௭௯)

முண்டகத்தன்வாளிவிஞ்சைமுனிமகன்றொடுத்தனன் - முண்ட கத்தன்வாளியால்முடித்தனனிசாசரன் - விண்டுவத்திரந்தொடுத் துவிட்டனனற்சான்றவன் — விண்டுவத்திரத்தினால்விலக்கினான் றயித்தியன். ... ... ... (௬௮௰)

214083 214083
5926 N. 14

அத்திரத்திலசுரனுவியகல்வதில்லையழிவிலாச் - சித்திரச்சமர்க் குடைந்தசெய்கையானுமல்லனால் - சத்தியைச்செலுத்திவந்தசத்தி யைத்தணிப்பனென் - றெத்தகைத்தலத்துவேலுறத்தினிற்சுழற் றினான். ... ... ... ... (௱௮௧)

விண்சுழன்றவெற்பினஞ்சுழன்றவெற்பின் விறன்மிகு - மண்சுழன் றமாதிரஞ்சுழன்றவந்ததானவ - னெண்சுழன்றமெய்சுழன்றவெரி சுழன்றெழுந்தசெங் - கண்சுழன்றநெட்டிலைக்கடுங்கைவேல்சுழன் றதால். ... ... ... ... (௱௮௨)

மின்றிகழ்ந்தவாகைதங்குவேல்சுழற்றியேவினான் - மன்றறங்கு பானுவேகன்மார்பினிற்புகுந்ததா - லொன்றிரண்டோடொன்ப தங்கையானுரத்தெறிந்தவே — லன்றிலங்குகிரியின்மீதுபட்ட தன்மையாமென. ... ... ... (௱௮௩)

மெய்யகன்றவாவிவிண்ணில்வீரமங்கைமார்புயத் - தெய்துகின் றதன்மைகண்டெதிர்த்துநின்றபொய்யுடல் - பொய்யிலாதமண் மகட்புணர்ந்தசெய்கையென்னவே - மெய்கொள்வாய்முழக்கினோ டுமுதுகுறவிழுந்தனன். ... ... (௱௮௪)

தானவன்புலைச்சடந்தனிற்புகுந்ததீமையா - லானதண்கடற்கண் மூழ்கியம்பொனாடராசிகொண் - டேனமின்றுயர்ந்தவென்றியொற் றைநெற்றிவிழியினு — னீனமின்றுயிர்த்தமைந்தனங்கைவந்தியை ந்ததால். ... ... ... (௱௮௫)

வேறு.

வந்ததம்பியர்மடிந்ததன்மையதுகண்டுநின்றமதிதீரனும் - சந்த வாசியினிலேறிவாள்பரிசைதாங்கிவந்தெதிர்செருத்தன — னந்த வேளைதாரகன்றுரங்கமிசையேறிவாள்பரிசையங்கைகொண் - டிந் திராதியர்புகழ்ந்ததம்பியைவிலக்கிவந்தவன்முனெய்தினான். ... ... (௱௮௬)

வெட்டினானுதிரவாளெடுத்துமதிதீரன்மேனியில்விழாவணங் - கட்டினானெடியகேடகங்கொடுநற்சான்றவர்க்கரசனவ - னெட்



மோதிரமுமஞ்சவன்கையிலெடுத்தகேடகமிடத்ததோ - டட்டினா னெடியவாள்விதிர்த்துலகுதட்டுமாறிட்டவதட்டினான் (௱௮௭)

சீறுசெங்கணனல்சிந்தவல்லசுரன்மேனியிற்சினவிவெட்டினா — னேறுகின்றசினமுந்தவஞ்சகனெடுத்தகேடகமுயர்த்தினான் - மீறு கின்றகடுமாருதஞ்சிதறமேகராசிவிழுகின்றபோ - லூறுதுண்டமெ னவிண்விளங்கிடநொறுங்கிமண்ணிடைவிழுந்ததால். (௱௮௮)

இருவருந்தனியுரப்புகின்றதொனியேழுதீவுமெழுவாரியுஞ் - செ ருமுகின்றவடமேருவின்கண்சிகரமெங்கணும்விரிந்ததால் - தரு மையம்பதிவருஞ்சிதம்பரனுவந்துதந்தபரதேசிதன் — பெருமை கொண்டுபுகழ்நாவலோர்கவிதைபேசுகின்றதொனிபோலவே. ... ... (௱௮௯)

அற்றகேடகமருமுனம்பலகையசுரனுயிரமெடுத்தனன் - குற்ற மில்லவன்விரைந்துவன்பலகையாயிரந்தரைகுவித்தனன் - வெற்றி வாள்கைகொடுசான்றவன்றனுடல்மேலெறிந்தனனிசாசரன் - மற்ற வல்லசுரன் வாளினைக்கடுக மண்டலைப்புரமா வெட்டினான். ... ... (௱௯௰)

கீழிகந்திருவரும்பெருங்கொலைகிளர்ந்தவாளரியினேறுபோ — லாழிதங்கும்வடவைப்பெருங்கனலுமண்டகூடமதிர்காலுமொத் - தேழிரண்டுலகமுங்குலுங்கவெழுசாரிகொண்டுலகழிக்கவந் - தூழி தங்கியவுருத்திரற்குநிகரொத்துவாளமருடற்றினார். (௱௯௧)

முந்துகைக்கடுமையானிசாசரன்முனிப்பெரும் புதல்வன்மோ லியை - சிந்திவாய்முழைதிறந்தொலித்தனனிறைந்தவானவர்திகை த்தன - ரந்தகாரமெனவந்தவல்லசுரராதினரிசைகள்பாடினர் — வந்தபூதகணமன்னரின்னலின்மயங்கினார்மனம்வருந்தினார். ... ... (௱௯௨)

கண்டுமாமுனியின்மைந்தனீசெய்தகடுப்புநன்றெனவியந்துநீ — கொண்டுவந்தநெடுவாளும் வானவர் கொடுத்தநல் வரமும் வாகை சேர் - வண்டுதுன்றுமுடியொன்றுமம்முடிவனைந்தவன்றலையும்வாளி னால் - துண்டமுண்டுவிழுமின்றுநீயிறைதுணிந்துநின்றுசமர்செய் தியால். ... ... ... ... (௱௯௩)

சேவகற்குரியவாய்மைசொல்வினையெனச்செறுத்தவனுரைக்கு
முன் - பூவகத்தவரைமீதுமின்னெறிவபோலவீசினனிசாசரன் —
றாவுடைக்கடியகண்டகங்கொடுதுரங்கனங்கறுவிலக்கினு - னே
வரிச்செயல்புரிந்துளாருலகிலென்றுவானவரியம்பினார். (௱௬௪)

விலக்கினின்றுமதிதீரன்வன்றலைவிளக்குமோலியையறுத்துநற் -
குலப்பெருங்கிரியுதிக்குஞாயிறுகுதித்துமண்ணில்விழுதன்மைபோ
— னிலத்திலிட்டனனிணக்கருந்தலையைநீரிலிட்டனனிலத்தினைக் -
கலக்கும்வாளொடுகரந்தடிந்துலகுகாவன்மால்வரையிலிட்டனன்.
... ... (௱௬௫)

நின்றதாருகனிறந்ததாமிவ்னிறந்தநென்றுநெடுவானவர் - குன்
றில்வீழுமழையன்னபன்மலர்குவித்துவந்தனர்துரங்கனைச் - சென்
றுதாருகன்முனின்றுனக்குரியசெய்கையாருயிர்சிதைந்தன - ரென்
றுதூதுவரியம்பினரசுரனஞ்சிநெஞ்சமுழுயெரிந்தனன். (௱௬௬)

பொன்னிநட்கமலவேதனிட்டபடிபொய்யுடற்குங்லையிலையால்
- சென்னியிற்பிறைமுடித்ததேவன்வரினுஞ்சிதைந்துவலிமாய்வரோ
— வென்னுயிர்த்துணைவரேழைமைந்தரெழுபேர்கொலத்துனியி
றந்தது — மன்னுமிப்புவியும்வானுமுள்ளளவுமிந்தவல்வசையுமா
யுமோ. ... ... ... ... (௱௬௭)

மற்றினிப்புகல்வதென்ன கானிடைவருங்கருப்பை யினமாசிலா
- சுற்றுடற்கொடிபவளராவினுயிர்சூரையிட்டதுகடுக்குமால் —
வெற்றுடற்கொடுதிரிந்துகானிடைவிழுந்துவிண்ணுலகிழந்துளார்
சிற்றினத்தவர்கணந்தொழும்புடையதேவருந்தலையெடுப்பரால்.
... ... (௱௬௮)

அக்கினிப்பெயரனக்கினிக்குநிகராமலங்குபுயவச்சிரன் — மிக்க
வச்சிரகிரிக்குநேர்தரவிளங்குவெம்பரிதிவேகனுங் - தொக்கவெம்
பரிதியொப்பமற்றவர்கள்மூவர்தம்பெருமைசொல்வதே — ளைக்க
வின்னுயிரிறந்துளாரெழுவர்வந்தெதிர்க்கினினியென்செய்கேன்.
... ... (௱௬௯)



நாயெனத்தகையபேயினத்தின்வலிநன்றுநன்றுசினமுந்துறப் -
பாயும்வெய்புலித்தானவர்க்கரசர்பத்துநான்கயுதவெள்ளமுந் - தீயி
னிட்டவிறகொத்ததாலிதுசிறப்பிகுந்தகையல்லவோ — யாவருக்
குமிளியாவரென்னினைவிலின்னலப்புறமகற்றுவார். ... (௨௱)

வேறு.

என்றுதம்முனோனிசைத்தசொல்கேட்டசாமீகன் — வென்றி
யுள்ளவர்தோற்றவர்வெலாதவர்வெல்வ - ரொன்றுமில்லவருயர்கு
வருள்ளவர்தாழ்வர் - குன்றுசூழ்ந்தநானிலத்தினியல்பிதுகூறிக்
கில். ... ... ... ... (௨௱௧)

பெருகுநன்னதிப்புனல்பெருக்கறுதிருந்திடுமே - உருவச்செங்க
திர்நாளெலாமிரவின்றியுறுமே - யுருமதிர்ந்தகார்காலத்திலுலகெ
லாம்பரந்து - மருவிநீக்கமின்றாகுமேயென்றனன்மதியோன்.
... ... (௨௱௨)

சொன்னவிம்மொழிமனங்கொண்டுதானவர்தோன்ற - லின்ன
ல்தீர்ந்தனன்றன்னகத்தெழுந்ததுவெகுளி — பொன்னந்தேரினை
நடாத்தினன்செங்களம்புகுந்தான் — தன்னுயிர்த்துணைச்சாமிக
னொருபுடைசார. ... ... ... (௨௱௩)

ஈன்புதந்தெனதம்பியரைக்கொலைசூழ்ந்த - வெம்புகண்டகரெங்
கடாவெனச்செலும்வேளை — பம்புபல்வளைச்சிங்கவேறதிர்ந்தது
பாரி - லெம்பிராட்டியுஞ்சமர்க்களத்தமர்க்கெனவெதிர்ந்தாள்.
... ... (௨௱௪)

குஞ்சரன்றடக்குஞ்சரம்பிடர்மிசைக்கொண்டான் - வெஞ்சினத்
தசாமீகன்றன்றேர்மிசைவிடுத்தா - னஞ்சிரட்டிநூறடுகணைதொடு
த்தனனசுர - னெஞ்சிலக்கணையனைத்தையுமறுத்தனனிகலோன்.
... ... (௨௱௫)

சுட்டவெங்கணையளப்பிலவில்லினிற்றொடுத்தான் - கிட்டுமுன்
னெரியாக்கினனேரிமைக்கிடையில் - விட்டவம்பெலாமுடித்தனனி
ங்கிவனென்னுக் — கட்டமைந்தபொற்காலவேலெடுத்தனன்கடி
யோன். ... ... ... (௨௱௬)

எடுத்தகாலவேலெறிவதன்முன்னமுன்னெதிரா - வடுத்தகுஞ் சரனாரிரண்டம்பினாலறுத்துப் - பிடித்தசூலத்தைச்சுழற்றினன்பே ருலகெல்லா - நடுக்கும்வஞ்சகன்வானிடைமறைந்தனனடுங்கி. ... ... (௨௱௭)

விண்ணிடைச்சென்றவேகத்தால்விண்ணவர்வெருவி - யுண்ணி னைந்தயர்ந்துலைந்தொருசூழலினொளித்தார் - நண்ணும்வஞ்சகன் புட்கரத்தீவினினடந்தா - னெண்ணுபோர்க்குடைந்தானெனும் பழிதொடர்ந்தேக. ... ... ... (௨௱௮)

வானவேந்தருஞ்சிரித்தனர்மருண்டதானவனு - மீனமெய்படதொ ன்றெண்ணலாதிரிந்தனனென்ன - வூனமின்றமுச்சூலுடைக்காளி யோடுடன்ற - பூனமின்றவேற்றாருகன்போரினைப்புகல்வாம். ... ... (௨௱௯)

பெருந்தவந்தனித்தியற்றியேபெண்ணுருவெடுத்த - வுருவமால் வரையொன்றுடனாணுருவமைந்த - கருமைசேர்நெடுமால்வரை யெதிர்த்ததுகவின - வெருவுதேவரும்வெஞ்சமர்க்காண்பதாவிரை ந்தார். ... ... ... ... (௨௱௰)

சங்கமுதினன்றாருகன்வானவர்சலித்தார் - திங்களஞ்சடைத் தேவனுந்துண்ணெனத்திகைத்தான் - மங்குல்வல்லுருமேற்றொடு முதிர்ந்தனமண்ணில் - பொங்குபேய்க்கணமண்டத்தின்மேலிப் புக்கதுவால். ... ... ... (௨௰௧)

தட்டினாள்பெருங்காளியும்தன்பெருந்திரடோ - ளெட்டுமாதிர மதிர்ந்தனமண்ணெலாமிடிந்த - கட்டுமாதிரக்கரியெரிகண்ணெ லாங்கழன்ற - நெட்டைவாளராமண்ணிடைப்படவொளித்தது வால். ... ... ... ... (௨௱௰௨)

வில்லினாணுறத்தொடுத்தனன்வெங்கணைகோடி - சொல்லின் மூன்றுறவிடுத்தனன்சுடுகணைசொரிதீப் - பல்கதிர்க்குழாமூழிநாள் வந்தெனப்படர்ந்த - செல்விகேடகத்தட்டினாற்றட்டினாள்சிதற. ... ... (௨௱௰௩)



முன்னைவானவர்முடித்தலைசாய்த்தனமுடிக்கு - மன்னுவல்வி டம்பகழியின்முனைதொறும்வழிய - வுன்னுமுன்னவைபெண்ணி ரண்டாயிரமுய்த்தா - னன்னைமின்னுபத்திரத்தினாற்சின்னமாய றுத்தாள். ... ... ... (௨௱௰௪)

அறுத்தகைத்துணையறுத்தியென்றாருகனையாய்ந்து - பொறு த்தவில்லிடைத்தொடைகொண்டுவிட்டனன்பொடியாய்ச் - சிறுத் தசின்னமாய்த்தறிந்தனகாளியுஞ்சினந்தாள் - மறுத்துவெங்கொலை க்காலன்வெங்கணையைவாங்கினால். ... (௨௱௰௫)

காலன்வெங்கணைவாங்கினன்விடுவதுகண்டாள் - சூலமுன் றெனவிரைவினில்வருவதுசுடுதீ - மேலெழுந்திடப்பத்திரம்விதிர்த் தனள்விலங்கி - நீலமாக்கடற்பாய்ந்ததுவானிடைநிமிர்ந்து. ... ... (௨௱௰௬)

அங்கியம்படையொருதொடையாயிரம்விடுத்தாள் - மங்கை வெங்கொலைவாளினாடுவறத்தடிந்தாள் - மங்குல்வல்லுருமுதிர்ந் தனமாரியைவகுத்தான் - செங்கைதாங்கியகேடகத்தட்டினாற் செறுத்தாள். ... ... ... (௨௱௰௭)

செறுத்தகாலையிற்சூன்மழைபகன்றிடச்சினந்தான் - பொறுத் ததிக்கின்வானவர்கணைமாரியிற்பொழிந்தான் - கறுத்தமேனியள் கண்டகத்தாலவைகடிந்தா - ளிறுத்தியாமெனமுக்கணன்கைக் கணையெடுத்தான். ... ... ... (௨௱௰௮)

வாங்குசெங்கணைமந்திரத்தேவினன்வானும் - தீங்கிலாதவள் சிவனுருவாமெனச்சிறந்தாள் - பாங்குநீங்கியதக்கணமிக்கபாரள ந்தோ - னேந்துவெங்கணைவாங்கினன்விடமெனுமுருவன். ... ... (௨௱௰௯)

தண்டுவாணெடுஞ்சக்கரந்தனுவளைசார - வெண்டிசாமுகமெ ரியெழமுழக்குடனெதிர்ந்து - விண்டுவினறனரியுருவென்வருவதை விரைவிற் - கண்டுவெம்மழுவெறிந்துபல்கண்டமாக்கினளால். ... ... (௨௱௨௰)

பிரபன் வெம்படைவிடுத்தனனறுத்தனள்பின்னைக் - குரவுசேர் குழல்பங்கனற்றவத்திறுங்கொடுத்த - உரவுசூலத்தையெடுத்தன ளொருபுடையிருண்ட - வரவுதாங்கியகிலமொருபுடைவெயிலான ... ... (உ௱உக)

சூழும்வெம்புகையெழுந்ததுமாதிரஞ்சூழ்ந்த - வாழியங்கிரிபொ டிபடவெங்கனுமதிர்ந்த - வேழுவேலையுமெழுந்தனவொருபுடை யியங்காப் - பாழியங்கிரிக்குவையெனவொருபுடைபரந்த. ... ... (உ௱உஉ)

எறிந்தகாலையிலென்னையாளுடையவளெறிந்தா - ளறிந்ததன் மனத்தழுக்கிலாதொருவன்முன்னடுக்குஞ் - செறிந்தவஞ்சகன்வஞ் சகச்செயலிற்சென்றதுவா - னிறைந்தவானவரிச்செயல்யாதென நினைந்தார். ... ... ... (உ௱உ௩)

தகர்முகத்தவன்வேள்வியைத்தடிந்தநாள்தன்னை - நிகரில்பாகத் தில்வைத்தவனுருவெனநின்றாள் - புகரில்வெங்கதிராயிரம்பொழி கதிர்முன்னர்த் — தொகையெதிர்ந்தவல்விருளெனமாய்ந்ததச் சூலம். ... ... ... ... (உ௱உச)

காலதண்டமொன்றெடுத்தனன்கண்டனளன்னை - கோலமு ண்டகச்செங்கையினுலதைக்குறைத்தா - ளாலமுண்டவன்வெருக் கொளவனல்விரிமுனையார் - வேலெறிந்தனனிருதுணியாக்கினள் வேலை. ... ... ... ... ... ... ... (உ௱உ௫)

ஒருத்திபெண்ணுருவெடுத்தவட்குடைந்துளோமென்னனிற் - செ ருக்களத்தெனக்குடைந்தனவானவர்சிரிப்பா - ரெரித்தயங்கியவ யிரவாட்படைபிடித்தெறிந்து - கருத்தழித்திவளாவியுண்பேனெ னக்கனன்றான். ... ... ... ... (உ௱உ௬)

நாந்தகத்தொடுகேடகம்வாங்கினனடந்தான். - வாய்ந்தவெண் புயத்தன்னையின்னேயிவன்வடிவா —: ளேந்துகையையுந்தலையை யுமறுக்குவனென்னப் - பாய்ந்துசிங்கவேறுகைத்தனள்பாரகம் வெருவ. ... ... ... ... ... ... (உ௱உ௭)



சிங்கவேற்றின்மேலோச்சினன்றீத்திரணெடுவா - ளங்கைகொ ண்டபொற்பலகையாற்றுங்கினளன்னை — சங்கபாணியுமீசனுந் தடுக்கினுந்தடாத - துங்கவாட்கொண்டகடக்கையைத்தடிந்தன டுணிய. ... ... ... (உ௱உ௮)

இடக்கையாற்கனலெறிந்தவாய்ச்சக்கரமெறிந்தா - னடக்கரும் பெலத்தன்னையுமதன்செயலறிந்தாள் — நடக்கும்வெஞ்சுடர்க்கி ருசுடராமெனநடப்பத் — தடத்தவானிடைப்பறந்திடவூதினுள் சருகில். ... ... ... (உ௱உ௯)

மற்றினிப்படையெடாவணம்வாய்திறந்தாரப்பிச் - சிற்றினத்தவ னிக்குள்செயலறிந்தனனென் - றொற்றைவாள்கொடுவீசினளு லகெலாந்துதிப்ப - மற்றவன்றலைமண்ணிடிபடவிழுந்ததுவால். ... ... (உ௱௩௰)

நிருத்தமாடின ரம்பையர்நிரம்பியவானோர் — வருத்துதாரு கன்றொழும்புசெய்யழுக்கெலாமாயத் - திருத்தமாடினர்கங்கையி ன்செல்வியைப்புகழ்ந்தார் - கருத்தின்மாதவராவலங்கொட்டினர் களித்தார். ... ... ... (உ௱௩க)

கணங்களோடினகளித்தனகண்டகனுடன்மேற் - பிணங்கிவீழ் ந்தனபிணமலைநகங்கிடவாடி - குணங்கொளன்னையைவலங்கொ ண்டுகைத்தலங்குவித்து — வணங்கிவாழ்த்தினரீரெழுபுவனமு மகிழ. ... ... ... (உ௱௩உ)

பார்த்துநின்றனள்சூலியுமிவனுடற்பார - நீர்க்கருங்கடலுல குமேதாங்கிடாநீண்ட — சீர்த்தபேருலகுயிரெலாமொருநிரை தின்ப - வார்த்தவானவர்க்குற்றநோயகன்றதின்றென்றாள். ... ... (உ௱௩௩)

இறந்தபேய்க்கணமெழுகெனமந்திரமியம்பச் — சிறந்தகாளி முன்வந்தனசெழுங்கணமனைத்துங் - குறைந்தசெங்களம்பிற்படக் குஞ்சரன்முதலாய் -- நிறைந்தமைந்தரோடணிநகர்க்கேகுவானி னைந்தாள். ... ... ... (உ௱௩ச)

தாருகன் வதைப்படலம் முற்றும். ஆகதிருவிருத்தம் சா௫க.

# நகர்புகு படலம்.

வினைத்தகாலையில்வானவரனைவருநிறைந்தார். -- புனைந்தவுகை யால்பெருந்தழற்சிந்தியபொறிபோல் - வனைந்தபொன்முடித்தாரு கன்விடமெனுமைந்த -- ரினந்நவாதவரிருவருண்டின்னுமென்றி சைத்தார். ... ... ... (க)

சிந்தையுட்கொண்டுசிறுவரென்செய்வர்வெஞ்செயலால் — வந் துளாரெனின்மாய்வரிம்மண்ணிடைவருந்தி - கொந்துநோய்தவிர்ந் தினிதுவீற்றிருமெனநுவன்றுள் -- புந்திசாலவுமுவந்தனர்விண் ணவர்போனர். ... ... ... (உ)

கையிற்சங்கணிமான்முதற்றேவருங்கரையப் - பையிடப்பாப்ப கன்பாரெலாம்பாழ்த்தவற்கொன்று — றிபக்கமுற்றிடச்சேனை யைத்திசைமுற்றுஞ்செலுத்தி - மயிடற்காய்ந்தவள்பிரதிட்டாபு ரம்வழிக்கொண்டாள். ... ... ... (ஙா)

செல்லும்வேளையிற்செங்கதிராயிரஞ்செறிந்த - வெல்லவன்றட வானகத்துச்சியெய்தினறு - கல்லடர்ந்துயரெரிகடவரையினைக் கண்டார் - பல்லவம்பொதிபொதும்பரினிருந்தனர்பரிந்து. ... ... (ச)

கண்ணுலாநுதற்காளியுங்கணங்கள்பல்கால — மெண்ணில்பே ரமருடற்றிபசெய்கையாலேகு - நண்ணுகானிடைகதிகொடுநடக் கின்றநடையா --- லின்னுநீர்நசையுள்ளதெனக்குஞ்சரற்குரைத் தாள். ... ... ... ... (ரு)

உரைத்தகாலையிற்கானெலாநேடினனுயர்ந்த — வரைத்தலக்கு வட்டும்பரினிவர்ந்தனன்வடபா - விரைத்துவண்டிமிர்கமலக்கான டர்ந்துளவெறிநீர்க் . கரைத்தரும்மலர்வளர்ந்தபுட்கரிணியக் கண்டான். ... ... ... (சா)

அன்னைசந்நிதிபோந்துரைப்பானலர்கமலம் - பொன்னின்வீ டெனவிளங்கிடும்புனல்கொளுந்தடந்தான் - மன்னுகங்கைபாய்



சைந்தாள் - முந்தையோரறிவுயிர்க்கொலைபழுதெனமுன்னி. ... ... (யச)

அன்னவான்றருவழிக்கொண்டுவிண்ணுலகதனில் - மன்னும் வானவரிந்தபொற்றருவினைவாங்கிப் — பொன்னவிர்ந்தசந்தானமா லிகைதரப்போற்றி - யின்னிலத்தினில்யாவருமருந்திடவெண்ணி ... ... (யரு)

குஞ்சரங்கொலும்யாளியேறன்னையுங்குணத்தால் - மிஞ்சுபூதங் கட்கிந்தனள்மைந்தர்க்கும்விருப்பி -- யஞ்சொலாலணிபூதியால் ரந்திரத்தருள - வெஞ்சவில்லவருண்டனர்தருவுயேகியதால். ... ... (யசா)

தாரைவாய்நெடுஞ்சூலியுமற்றைநாள்தங்கிக் - காரகிற்கமழெரி படுநெடுவரைக்காவின் - சீரநன்னிழல்வழிக்கொண்டுசெம்பொ ருவிபற்று --- மாரல்சுற்றுபிட்டாபுரவளநகரடைந்தாள். ... ... (யஎ)

செக்கர்வான்சடைக்காளியுஞ்சிறுவருந்திரண்டு — பக்கமின் னும்வாட்பசாசினுக்கரசரும்பரந்து — புக்கசேனையுங்கருங்கட லொத்ததப்புணரி - நக்குகின்றதோர்குறுமுனியொத்ததந்நகரம். ... ... (யஅ)

நகர்புகுபடலம் முற்றும். ஆக விருத்தம் சாசுகூ.

---

சான்றோர் புராணம் முதற்பாகம் முற்றுப்பெற்றது.

45926
214083

சடையினைவயங்குவெண்மலரால் - மின்றுவெண்பொடிபுனைதிரு
மேனியின் விளங்கும். ... ... ... (௭)

பாசடைப்பரப்பிடைவிரிதாமரைப்பைம்பூக் - கேசவன்றிரு
வுருவெனவொருபுடைக்கிளரும் - தேசிற்செம்மணிநிரைத்தெறி
பற்பலதிரையாற் -- காசில்சேடனதுருவெனவொருபுடைக்கவி
னும். ... ... ... ... (௮)

முனிவரங்கியின்புகைநெடுமுகிலெனமுயங்கும் - பனிகொள்
சோலையிற்சிறுமலர்த்தேனொடுபழுத்த -- கனிநெகிழ்ந்ததேனம்
முகின்மழையெனக்காலு - மினியதண்டலைவானளவாயுயர்ந்திரு
க்கும். ... ... ... ... (௯)

உலகமூண்ணினுங்குறைபடாதுலகுடையான்ற - னிலவுசெல்
வத்தினீண்டதுதெளிந்தபுட்கரிணி - குலவுமிவ்வரைவடவருகிருப்
பதுகுழாங்கொண் -- டலகில்சேனையோடேகுதுமென்றலனம
லன். ... ... ... ... (௰)

அன்னைதன்னுடைமைந்தருமகிழ்பேய்க்கணமும் - முன்ன
டந்திடவெரிகடமுதுவரைச்சாரன் - மின்றுபூம்பொழிலூடுபோ
ய்விரும்புநீரிருந்த - சென்னல்சேர்வயல்புட்கரிணிக்கரைசேர்ந்
தார். ... ... ... ... (௰௧)

சென்றுசாருமுன்முருகன்மைந்தர்வெஞ்சினத்த - குன்றுபோ
ல்பவர்குணுங்கன்வெம்பவனென்றிருவ - ரொன்றுசென்றுறப்பரு
கினருயர்தருவுருவாய் — நின்றுளார்செயலுணர்ந்திலர்திகைப்
பொடுநின்றார். ... ... ... (௰௨)

விரும்புநீர்த்துறையாதெனமைந்தனைவினவப் - பெரும்புனற்
றடமிதுமுன்னமேபெரும்புனலா - விருந்ததிப்பொழுதிருப்புனல்
காண்கிலேனென்று — னிரம்புசிந்தையாளசுரர்வஞ்சனையென
நினைத்தாள். ... ... ... (௰௩)

வந்தகாளியுங்கண்டனடைசருகன்மைந்த - ரிந்தவான்றருவிரண்டு
மிப்புனலுண்டுநின்ற ... ரெந்தகாவி ... ருவாய்நிற்கவென்றி

324083 சென்னை-600 ... 5924 N 14